
Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

## புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 24 இதழ் - 4 ஏப்ரல் 2011

தனிப் பிரதி ரூ. 8/-



ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!

## பதினான்காவது வேனிற்கால வேதாகம முகாம் மற்றும் திருமறை தியானம் நேயர்கள் & திருமறை ஆசான் வாசகர்கள் கருத்தரங்கம்

**இடம் : YMCA வளாகம், ஏலகிரி மலை (வேலூர் மாவட்டம்)**

**நாள் : மே மாதம் 2,3,4 - 2011 (திங், செவ், புதன்)**

**சிறப்பம்சங்கள்**

- கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு,தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
- ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
- பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்
- கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.
- வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்
- குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
- பெண்களுக்கு தனி இடவசதி.
- சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

**பதிவுக்கட்டணம் : பெரியவர்கள் ரூ. 125/ சிறியவர்கள் ரூ. 75/**

**கிறிஸ்துவின் சபை**, 288, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.
Ph : 04257-230030 Cell : 98427-30382, 99655-30385

**குறிப்பு :** சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

## ஆசானின் போதனையில்....


1. ஆசிரியர் உரை .................................... 1
2. சிந்தனைக்கான நவீன 10 கட்டளைகள் ............ 10
3. ஏன் விசுவாசம் முக்கியமானது? ....................... 11
4. பெண்கள் பகுதி .......................................... 16
5. வாலிபர் பகுதி ............................................ 19
6. சிறுவர் பகுதி .............................................. 22
7. உங்களுத் தெரியுமா? .................................... 24
8. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ......... 29


**BIBLE MEDITATION**

**TV PROGRAM**

TAMILAN TV - Sunday 6:45 am..
TAMILAN TV - Monday 7:00 am
TAMILAN TV - Saturday 7:15 am.

**வாசகர்களின் அன்பான கவனத்திற்கு**

உங்கள் யாவரையும் எதிர்வரும் பதினான்காம் வேனிற்கால வேதாகம முகாமிற்கு ஆவலோடும், ஜெபத்தோடும் எதிர்பார்க்கிறோம்.

குடும்பமாகவும், சபையாகவும் கலந்து கொள்ளுங்கள்

- ஆசிரியா

# THIRUMARAI AASAAN



**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385



**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 24 APRIL - 2011 Issue - 4**


ஆசிரியர் உரை

## லோத்துவின் தெரிந்து கொள்ளுதல்

மானிடராய்ப் பிறந்த எல்லோருக்கும் "தெரிந்து கொள்ளுதல்" வாழ்வின் ஒரு முக்கியமான பங்கு என்பதில் இரு வேறு கருத்துக்கு இடமில்லை. இருப்பினும், இத்தெரிந்து கொள்ளுதலின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் மானிடம் அறிந்து வைத்திருக்க வேண்டிய அளவு அறிந்து வைத்திருக்கிறதா என்பது ஓர் இமாலயக் கேள்வி. எப்படியெனில், தெரிந்து கொள்ளுதலில் தெளிவும், திட சிந்தையும் இருந்திருக்குமானால், இன்றைக்கு மானிடம் தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமுதாய வாழ்விலும், தேச வாழ்விலும் சந்தித்துக் கொண்டிருக்கும் பல உபாதைகளையும், வேதனைகளையும், கண்ணீர்களையும், சோதனைகளையும், தோல்விகளையும் கண்டிப்பாகத் தவிர்த்திருக்க முடியும். காலம் கடந்து மனிதன் தன் வாழ்வில் பெற்றுக் கொள்கின்ற புத்தி, தெரிந்து கொள்ளுதலின் போது ஏனோ அவனுக்கு இல்லாமல் போய் விடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையை ஏறத்தாழ எல்லா மனிதர்களும் ஏதாவது ஒரு கட்டத்தில் சந்திக்க வே செய்கிறார்கள். ஆகவே, இரண்டில் ஒன்றையோ அல்லது இருக்கின்றவைகளில் ஒன்றையோ தெரிந்து கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில் மிகவும் கவனமாகவும், எச்சரிப்பாகவும் இருக்க வேண்டியது அவசியம்.

தெரிந்து கொள்ளுதல் முக்கியமானதே என்பதற்கு வேதாகமும் தனது பக்கங்களில் வலு சேர்க்கவே செய்கிறது. ஆம், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட (எண் 16:28) மாபெரும் தலைவனாகிய யோசுவா, தன்னுடைய இறுதி நாட்களில் இஸ்ரவேலின் மூப்பரையும், தலைவரையும், நியாயாதிபதிகளையும், அதிபதிகளையும் வரவழைத்து, இவ்விதமாய்ச் சொல்லியுள்ளார். "கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க்

கண்டால் பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள். நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்" என்றான் (யோசுவா 24:5). இவ்வசனம் அறிவுறுத்தும் கருத்து என்ன? சரியானதைத் தெரிந்தெடுங்கள். தெளிவாகச் சிந்தித்துத் தெரிந்தெடுங்கள் என்பது தானே.

சரியான தெரிந்து கொள்ளுதல் ஒருவனைக் கர்த்தரண்டை கொண்டு செல்கிறது. தவறான தெரிந்து கொள்ளுதல், ஒருவனை கர்த்தரை விட்டு விலகிப் போகச் செய்கிறது. சரியான தெரிந்து கொள்ளுதல் ஒருவனை நித்திய ஜீவனுக்கு வழிநடத்துகிறது. தவறான தெரிந்து கொள்ளுதல் ஒருவனை நித்திய அழிவிலே கொண்டு போய்த் தள்ளுகிறது. (மத். 25:46) இப்படி அதி முக்கியமாக இருக்கும் தெரிந்து கொள்ளுதலில் நாம் எல்லோரும் தெளிவுள்ளவர்களாக இருக்க, முற்பிதாக்களின் காலத்தில் வாழ்ந்த லோத்து முன்னுதாரணமாகவும், எச்சரிப்பாகவும் இருக்கிறார். ஏனென்றால், லோத்து என்றாலே அவனுடைய நீதியான வாழ்க்கை பின்தள்ளப்பட்டு மோசமான தெரிந்து கொள்ளுதல் தான் வேதம் அறிந்தவர்களின் நினைவுக்கு சட்டென வரும். ஆகவே, அவனுடைய தெரிந்து கொள்ளுதல் எப்படிப்பட்டதாக இருந்தது என்று நாம் கவனித்து நமக்கான பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமின் உடன் பிறப்பாகிய ஆரானின் குமாரன் தான் இந்த லோத்து. இந்த ஆரான், ஆபிரகாமுக்கும், நாகோருக்கும் தகப்பனான தேராகு மரிக்கு முன்னே மரணமடைந்தான். அதாவது, லோத்து தன் இளம் பிராயத்திலேயே தகப்பனை இழந்து விட்டான். இதினிமித்தம் தன் தாத்தாவாகிய தேராகுக்கும், பிள்ளையில்லாமலிருந்த தன் பெரியப்பாவாகிய ஆபிரகாமுக்கும் செல்லப் பிள்ளையாகி விட்டான். அதினிமித்தம், அவர்கள் செல்லுமிடங்களில் இவனைத் தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டது (ஆதி. 11:27- 31) காரியங்கள் இப்படிச் சென்று கொண்டிருந்த போது, தாத்தா தேராகு தனது 205 வயதில் மரித்துப் போனான் (வச. 32).

இப்படிப்பட்ட பின்னணியில்தான் தேவனுடைய சிறப்பான அழைப்பையும், கட்டளையையும் ஆபிரகாம் பெற்றான் (ஆதி. 12:1). தேவ அழைப்பையும், கட்டளையையும் ஆபிரகாம் மறுமொழி பேசாமல் ஏற்றுக்கொண்டாலும், லோத்துவின் சூழ்நிலை காரணமாகவும், தகப்பனில்லா தனயனோடு தனக்கு ஏற்பட்டுவிட்ட நெருக்கத்தின் காரணமாகவும் லோத்துவை ஆபிரகாமால் தவிர்க்க முடியாமல். கானானுக்கான பயணத்தில் தன்னோடு சேர்த்துக் கொண்டான் (ஆதி. 12:5), தொடர்ந்து, ஆபிரகாமோடு எகிப்துக்கும் சென்றான். (ஆதி. 13:1). பூவோடு

சேர்ந்த நாரும் மணக்கும் என்பது போல, ஆபிரகாமோடு வந்ததால், லோத்துவும் செல்வந்தனானான் (ஆதி. 13:5,6).

இவர்கள் இருவரின் சொத்துப் பெருக்கம் இவர்கள் ஒருமித்து வாழ அனுமதிக்கவில்லை. இவர்கள் ஒருவரை யொருவர் நேசித்தாலும், இதுகாறும் நெருக்கம் காத்து வாழ்ந்தி ருந்தாலும் இவர்களது சொத்தும், சொத்து சார்ந்த பிரச்சனையும் ஏற்பட்டு இவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்து போகும்படி நிர்பந்தித்தது. மனிதர்களால் பெரிதாக விரும்பப்படும் சொத்து சுகங்கள் ஆதிகாலந் தொட்டே இப்படிப்பட்ட தீமையைத் தான் விதைத்து வந்திருக்கிறது. ஆனா லும், மனுக்குலம் பாடம் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.

சரி, இந்த இடத்தில் தான் லோத்துவின் தெரிந்து கொள்ளு தலுக்கான பின்னணி ஆரம்பமாகிறது. ஆம், அங்கே இரண்டு பேருடைய மந்தை மேய்ப்பர்களுக்குள்ளாக நடந்த வாக்குவாதத் தின் தன்மையையும், அது சீக்கிரத்தில் கொண்டு வரப்போகும் பிரச்சினையின் ஆழத்தையும், வயதில் மூத்தவரும், விசுவாசத்தில் வல்ல வருமாகிய ஆபிரகாம் கனகச்சிதமாகப் புரிந்து கொண்டார். பிரச்சினையை முளையிலேயே கிள்ளி எறியத் தீர்மானம் பண்ணி இவ்விதம் பேசினார். “ஆபிரகாம் லோத்தை நோக்கி, எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம். நாம் சகோதரர். இந்தத் தேசமெல்லாம் உனக்கு முன் இருக்கிறது அல்லவா? நீ என்னை விட்டுப் பிரிந்து போகலாம், நீ இடம் புறம் போனால், நான் வலது புறம் போகிறேன்; நீ வலது புறம் போனால், நான் இடது புறம் போகிறேன் என்றான்” (ஆதி. 13:8,9).

இவ்வசனங்களில், ஆபிரகாமின் ஆழ்ந்த பக்தியும், தேர்ந்த பெருந்தன்மையும் பளிச்சென வெளிப்படுகிறது. தங்களுக்குள் ளாக “வாக்குவாதம்” வேண்டாம் என்று ஆபிரகாம் எண்ணிய தற்கு இரண்டு பலமான காரணங்கள் இங்கே உண்டு. 1. அக்காலத் தில் கானானியரும், பெர்சியரும் அத்தேசத்தில் குடியிருந்தார்கள் (13:7) 2. இவர்கள் இருவரும் சகோதரர்களாயிருந்தது. மெய் யான தேவன் மீது பக்தியாக இருக்கும் நாம், விக்கிரகங் களை வணங்கும் புறவினத்தாருக்கு மத்தியில், வாக்குவாதம் செய்து சாட்சியைக் கெடுத்துவிடக்கூடாது. இன்னும், நாம் ஒரு தகப்பன் மக்களாக இருக்கிறபடியால் சண்டையிட்டுக் கொள்ளவும் கூடாது. தன் பக்தி வாழ்வுக்கு எந்த நிலையிலும் பங்கம் வந்து விடக்கூடாது என்பதில் ஆபிரகாமுக்கு எவ்வளவு கவனம் பாருங்கள்.

அப்படியானால், நம்முடைய பக்தி வாழ்க்கையில் நம்மு டைய காரியங்கள் எந்தளவில் உள்ளது? சாட்சியான வாழ்வுக் கும், சகோதரன் என்னும் சிறப்புக்கும் நாம் என்ன மரியாதை கொடுத்து வாழ்ந்து கொண்டுள்ளோம். இத்தனைக்கும் ஆபிரகாமின் நாட்களில், கிறிஸ்துவின் தியாகமும், உபதேசமும் இல்லை. அப்போஸ்தலர்களின் ஊழியம் இல்லை. சாட்சியான

வாழ்வு பற்றியும், சகோதர சிநேகம் பற்றியும் எழுதிக் கொடுக்கப் பட்ட வேத வசனங்கள் இல்லை. ஆனாலும், சாட்சிக்கும், சகோதரத்துவத்துக்கும் இவ்வளவு முக்கியத்துவம். ஆனால், நமக்கோ எல்லாம் இருக்கிறது. ஆனால், சாட்சியான வாழ்வு? சகோதரத் துவம்? பூத கண்ணாடி வைத்துத் தேடினால் கூடத் தென்படாது என்கிறீர்களா? இருக்கட்டும், இருக்கட்டும்; எல்லாவற்றுக்கும் ஒரு நாள் உண்டு. அப்படித்தானே!

"சகோதரர்" என்ற அந்தஸ்துக்கு, எவ்விதப் பங்கமும் வந்து விடக்கூடாது என்று ஆபிரகாம் மனதிலே தீர்மானம் செய்து, தன் வாயில் உதிர்த்த வார்த்தைகளைக் கொஞ்சம் பாருங்கள். "...இந்தத் தேசம் எல்லாம் உனக்கு முன்பாக இருக்கிறது" அல்லவா? என்றான். எந்த தேசம்? தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசம். ஆம், லோத்துவுக்கல்ல. இங்கே ஆபிரகாம், "என் தேசம்" என்று சொல்லியிருந்தால் கூட அங்கே தவறில்லை. ஆனால், இந்த தேசம் என்று சொல்லி, "இது இரண்டு பேருக்கும் பொதுவானது" என்ற பாணியில் பேசுகிறார். அடுத்து, "நீ என்னை விட்டுப் பிரிந்து போகலாம்" என்று கூறுகிறார். ஆபிரகாம் வயதிலே பெரியவர், ஆஸ்தியில் பெரியவர், வாக்குத்தத்தின் சொந்தக்காரர். "நீ என்னை விட்டுப் போ" என்று சொல்லியிருந் தால் கூட அங்கே தவறு காண முடியாது. ஆனால், "நீ இடது புறம் போனால், நான் வலது புறம் போகிறேன்; நீ வலது புறம் போனால், நான் இடம் புறம் போகிறேன்" என்றான். தன்னை அண்டி வந்து பிழைப்பு நடத்துகின்ற ஒருவனிடம் பேசக்கூடிய பேச்சா இது! சாட்சியான வாழ்வுக்காகவும், சகோதரன் என்ற நாமத்திற்காகவும் எவ்வளவு தூரம் தாழ்ந்து போயிருக்கிறார் பாருங்கள்!!.

ஆனால், ஆபிரகாமின் பெருந்தன்மையையும், பக்தியின் வெளிப்பாட்டிலான செயல்பாட்டையும் சுத்தமாகப் புரிந்து கொள்ளாத அண்டி வந்த லோத்து, ஏதோ தனக்குச் சாதகக் காற்று வீசுகிறது என்று எண்ணி, விட்டுக் கொடுத்த பெரியப்பாவின் நல்லெண்ணத்தைக் கிஞ்சித்தும் மதிக்காமல் தன்னலச் செயலில் இறங்கினான். வேத வசனம் சொல்வதைப் பாருங்கள். "அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து யோர்தான் நதிக்கு அருகான சம பூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக் கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கும் முன்னே. சோவாருக்குப்போம் வழி மட்டும் அது கர்த்தருடைய தேசத்தைப் போலவும் எகிப்து தேசத்தைப் போலவும் இருந்தது". (ஆதி. 13:10) ஆபிரகாம் சொன்னது தான் தாமதம். லோத்து அங்கே, எவ்வித தயக்கத்தை யும் காட்டவில்லை. உடனே கண்களை ஏறெடுத்துப் பார்த்துள் ளான். அங்கே, லோத்துவிடம் ஆபிரகாமுக்கான மரியாதையும் இல்லை பெற்றுக் கொண்டவைகளுக்கான நன்றியும் இல்லை. இன்னும் பக்குவம், முதிர்ச்சி என்று எதுவுமே இல்லை. மாறாக, தன் நலனை மையப்படுத்தின சிந்தை மாத்திரம் விண்ணை முட்டியிருந்தது. "தன்னலம்" என்ற சுனாமி ஒருவனைத் தாக்கி

விட்டால் அவன் தன்னைச் சுற்றியிருப்பவர்கள் எல்லோருடைய நலனையும் பறிகொடுத்துத் தான் ஆக வேண்டும். வேறு வழியே இல்லை.

லோத்து இப்படிக் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, யோர் தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்து கொண்டு, கிழக்கே பிரயாணப்பட்டுப் போனான்; இப்படி அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தார்கள். ஆனால், மரியாதை, நன்றி, பெருந்தன்மை, முதிர்ச்சி என்று எல்லாவற்றையும் காற்றிலே பறக்கவிட்டு, தன்னலத்தை மையப்படுத்தின லோத்துவின் வாழ்க்கையில் என்ன நடந்தது என்று பாருங்கள்.

லோத்து பிரிந்து போன கொஞ்ச காலத்தில், அப்பகுதியிலிருந்த ராஜாக்களுக்குள் யுத்தம் வந்து, இவன் தெரிந்து கொண்ட சோதோம், கொமோராவின் ராஜாக்கள் தோல்வியுற்றபடியால், எதிரிகள், "அங்கே குடியிருந்த லோத்துவையும், அவன் பொருள்களையும் கொண்டு போய் விட்டார்கள்". (ஆதி. 14:11). பொருள்களைப் பெருக்க ஆசைப்பட்டவன் இருந்தவைகளையும் இழந்தான். போச்சா. ஒருவேளை, ஆபிரகாம் தலையிட்டு மீட்டுக் கொடுத்தான் என்று பின்னால் சொல்லப்பட்டாலும் (14:16). ஆரம்பத்தில் இழந்தது இழந்தது தானே. இன்னும், தேவன் சோதோம், கொமோராவை அதின் பாவத்தினிமித்தம் அழிக்கத் தீர்மானித்த போது, சொத்துக்கள் கொண்டிருந்த பட்டணத்தை விட்டு வலுக்கட்டாயமாக குடும்பத்தோடு வெளியேற்றப் பட்டார்கள். (ஆதி. 19:15,16). மீண்டும் பொருள்களை இழந்தான். அது மாத்திரமா, தன் ஆசை மனைவியை இழந்தான். அதற்குமுன், அவன் அவர்களுக்குள்ளாக வாழ்ந்த நாட்களில் சமாதானத்தையும் இழந்தவனாகவே வாழ்ந்துள்ளான். ஆவியானவர், பேதுரு ஆசிரியரைக் கொண்டு இந்த உண்மையை இவ்விதம் வெளிப்படுத்தியுள்ளார். "அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப் பட்டு; நாள் தோறும் அவர்களுடைய அக்கிரமக் கிரியைகளைக் கண்டு, கேட்டு நீதியுள்ள தன் இருதயத்தில் வாதிக்கப்பட்டான்" என்று (IIபேதுரு 2:7). மேலும், ஒரு கட்டத்தில் தன் நிலை இழந்து பெற்ற பிள்ளைகளோடு கொண்ட தகாத உறவால் மானத்தையும் இழந்தான் (ஆதி. 19:30-36) தெரிந்து கொள்ளுதலில் லோத்து நடந்து கொள்ள வேண்டிய அளவு நடந்து கொள்ளாததின் விளைவைக் கவனித்தீர்களா? பொருள் போச்சு, சமாதானம் போச்சு, மானமும் சேர்ந்து போச்சு. இனி போவதற்கு என்ன தான் இருக்கிறது? இங்கே மிகுந்த வலியை ஏற்படுத்தக்கூடிய ஓர் உண்மை என்னவென்றால், இவைகள் அனைத்தும் இவன் "நீதிமானாக" வாழ்ந்தும் (II பேதுரு 2:8) நடந்திருக்கிறது. இவைகளுக்கெல்லாம் அடிப்படை, தெரிந்து கொள்ளுதலில் செய்த தவறு தான். நம்முடைய வாழ்க்கையில் தெரிந்து கொள்ளுதல் எவ்வளவு முக்கியமானதென்று இப்பொழுதாகிலும் விளங்குகிறதா?

இப்பொழுது, லோத்துவின் தெரிந்து கொள்ளுதலிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

**I தவறான தெரிந்து கொள்ளுதல் வாழ்க்கையைப் பாதிக்கும்**

லோத்துவின் தவறான தெரிந்து கொள்ளுதலிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், தெரிந்து கொள்ளுதல் ஒருவனுடைய வாழ்க்கையைப் பாதிக்கும் என்பது.

லோத்து, தன்னுடைய தெரிந்து கொள்ளுதலினால் எப்படிப்பட்ட விளைவைச் சந்திக்க நேர்ந்தது என்று கண்டோம். இது நம்முடைய பூமிக்குண்டான வாழ்விலும், மறுமைக்குண்டான வாழ்விலும் நாம் கவனமாக இருக்க வேண்டுமென்ற எச்சரிப்பைக் கொடுக்கிறது.

ஆதிப் பெற்றோராகிய ஏவாளும், ஆதாமும் கர்த்தருக்கும், சர்ப்பத்துக்கும் இடையே யாருடைய வார்த்தையைத் தெரிந்தெடுப்பது என்கிற காரியத்தில் செய்த தவறின் விளைவை அவர்கள் அனுபவித்ததோடு முடிந்து போகாமல், உலகமானது இன்றளவும் அனுபவித்து வருகிறது. (ஆதி. 3:1-11). இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுல் கீழ்ப்படிதலுக்கும், கீழ்ப்படியாமைக்கும் இடையே எதைத் தெரிந்து கொள்வது என்பதில் செய்த தவறால் (1சாமு 15:1-35) தன் கீரிடத்தை இழந்தான். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கும், பாகாலுக்கும் இடையே யாரைத் தெரிந்தெடுப்பது என்பதில் செய்த தடுமாற்றம் (1 ராஜா 18:21-40) பின்னாளில் அவர்கள் தேவனை விட்டு முற்றிலும் பின் வாங்கிப் போகும்படியாகச் செய்தது. இவைகளெல்லாம் நமக்கு விழிப்பைக் கொடுக்கும்படியான சில உதாரணங்கள் மட்டுமே.

அப்படியானால், நம்முடைய சரீர, ஆவிக்குரிய வாழ்வில் நாம் எப்படியிருக்க வேண்டும்? என்ன செய்ய வேண்டும்? வாழ்க்கைக்கான ஒரு துணையைத் தெரிந்தெடுப்பதில் (மத். 19:16). வாழ்வதற்கான ஒரு வேலையை அல்லது தொழிலைத் தெரிந்தெடுப்பதில் (எபே 4:28). இன்னும், வாழ்க்கையில் சிநேகிதர்களைத் தெரிந்தெடுப்பதில் (நீதி. 17:17;12:26) என்று எல்லாக் காரியங்களிலும் கவனம் தேவை. ஏனென்றால், எல்லாவற்றுக்கும் விளைவு உண்டு.

ஆவிக்குரிய காரியங்களில் தெரிந்தெடுப்பதில் இன்னும் கூடுதல் கவனம் தேவை. சரீர வாழ்க்கைக்கான தெரிந்து கொள்ளுதலில் நேரும் தவறு சரீர வாழ்க்கையோடு, இப்பூமியோடு முடிந்து போகும். ஆனால், ஆவிக்குரிய வாழ்வில் நிகழும் தவறு நித்திய காலத்திற்கும் தொடரும். ஆகவே, நம்முடைய வணங்குதலுக்கான ஒரு தேவனைத் தெரிந்தெடுக்கும் போதும் (யாத். 20:3-5). நம்முடைய பாவ விமோசனத்திற்கான ஒரு இரட்சகரைத் தெரிந்தெடுக்கும் போதும் (யோவா 3:16; லூக். 19:10) தேவனை ஆராதிப்பதற்கான ஒரு சபையைத் தெரிந்தெடுக்கும் போதும் (மத். 16:18; யோவான் 4:24). இரட்சிப்படைவதற்கான உபதேசத்தைத் தெரிந்தெடுக்கும் போதும் (அப். 2:40), பக்தி வாழ்வுக்கான போதனைகளைத் தெரிந்தெடுக்கும் போதும் (அப். 2:42), பரலோக வாழ்வுக்குக் கைகாட்டும் நியாயந்

தீர்ப்புக்கு நம்மை ஆயத்தமாக்கும் போதும் (யோவான் 12:48) நாம் மிகவும் கவனமாகவும், எச்சரிப்பாகவும் இருக்க வேண்டும்.

அருமையானவர்களே, தெரிந்தெடுக்கும் இக்காரியத்தில் நாம் ஏனோதானோ என்று இருப்போமானால், சரீர வாழ்விலம், துன்பத்தைச் சுமந்து, நித்திய வாழ்விலும், அக்கினியில் நெளிந்து கொண்டிருக்க நேர்ந்து விடும். ஜாக்கிரதை அவசியம்.

## II தெரிந்து கொள்ளுதலுக்கு ஜெபம், ஆலோசனை தேவை

லோத்துவின் தவறான தெரிந்து கொள்ளுதலிலிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், தெரிந்து கொள்ளுதலுக்கு ஜெபமும், ஆலோசனையும் தேவை என்பது.

தெரிந்து கொள்ள வேண்டிய தருணம் லோத்துவின் வாழ்க்கையில் வந்த போது, அவன் தேவனிடத்தில் ஜெபித்ததாக வோ அல்லது தன்னை ஆதரித்த தன் பெரியப்பாவிடம் ஆலோசனை கேட்டதாகவோ சொல்லப்படவில்லை. வாய்ப்பு வந்தவுடன் அதை விட்டுவிடக்கூடாது என்னும் நோக்கில், கண்களை ஏறெடுத்துப் பார்த்து, நீர்வளம் பொருந்தின பகுதி எது என்று பார்த்து, தன்னுடைய ஞானத்தின்படியாகச் செயல்பட்டான். ஆனால், தன்னுடைய ஞானத்தின்படியாகச் செயல்படுகிறவனைக் குறித்து ஏசாயா தீர்க்கன் சொல்வதைக் கவனியுங்கள். "தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்துக்குப் புத்திமான் களுமாய் இருக்கிறவர்களுக்கு ஐயோ!" (ஏசா 5:21) லோத்துவின் வாழ்க்கையில் இந்த வசனம் அப்படியே நிறைவேறியுள்ளது.

அப்படியானால், நாம் என்ன செய்ய வேண்டும்? தெரிந் தெடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் வாழ்வில் வரும்போது, முதலாவது தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டும். கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் இதற்கு மிகச் சிறந்த முன்னுதாரணமாக இருக்கிறார்கள். ஆம், துரோகத்தினால் இயேசுவைக் காட்டிக் கொடுத்துத் தன் உன்னத அழைப்பை இழந்து போன யூதாஸ் ஸ்காரியோத்துக்குப் பதிலாக, அந்த ஸ்தானத்திற்கு பர்சபா எனப்பட்ட யோசேப்பு மற்றும் மத்தியா ஆகிய இவர்கள் இருவரில் ஒருவனைத் தெரிந்தெடுக்க வேண்டிய தருணம் வந்த போது, இரண்டு பேரையும் நிறுத்தி, "எல்லாருடைய இருதயங் களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக் குரிய இடத்துக்குப் போகும்படி இழந்து போன இந்த ஊழியத் திலும் இந்த அப்போஸ்தலப் பட்டத்திலும் பங்கு பெறுவதற்காக, இவ்விரண்டு பேரில் தேவரீர் தெரிந்து கொண்டவனை எங்க ளுக்குக் காண்பித்தருளும் என்று ஜெபித்துள்ளார்கள்" (அப். 1:24,25) இந்த முன் மாதிரியை நாம் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும்.

இன்னும், ஒன்றைத் தெரிந்தெடுப்பதற்கு நம்முடைய அறிவு போதவில்லை என்ற நிலை வரும் போது, தேவனிடத்தில் கேட்க வேண்டுமென்று யாக்கோபு ஆசிரியர் கூறுகிறார். "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால்,

யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன்; அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக். 1:5) ஆக, தேவனிடத்தில் ஞானத்தைக் கேட்க வேண்டும். அத்தோடு தேவ மனிதர்களிடத்தில் ஆலோசனையும் கேட்க வேண்டும். இது குறித்து ஞானி சாலமோனைக் கொண்டு தேவன் சொல்வதை கவனியுங்கள். "ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்த போவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்". (நீதி. 11:14). ஆலோசனை சரியானவர்களி டத்தில் கேட்காத போது தீமை தான் வந்து சேரும். சாலமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் இதற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டு. (I ராஜா. 12:1-14).

ஆகையால், அருமையானவர்களே, நம்முடைய வாழ்வில் தெரிந்தெடுக்க வேண்டிய அநேக தருணங்களை நாம் ஒவ்வொரு வரும் கடந்து செல்கிறபடியால், தெரிந்தெடுக்கும் முன்பாக ஜெபிக்கவும், தேவனுக்குப் பயந்தவர்களிடத்தில் ஆலோசனை கேட்கவும் தவறக்கூடாது.

**III தெரிந்து கொள்ளுதலில் ஏற்படும் தவறைக் களைவது அவசியம்**

லோத்துவின் தவறான தெரிந்து கொள்ளுதலிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், தெரிந்து கொள்ளுத லில் ஏற்பட்ட தவறைக் களைய வேண்டும் என்பது.

தன்னலம் கொண்ட லோத்து ஒரு கட்டத்தில் தன்னுடைய மாம்சமும், மனசும் விரும்பினதைத் தெரிந்தெடுத்திருந்தாலும், அவன் தெரிந்தெடுத்த இடத்தை விட்டு "ஓடிப்போ" என்று தேவ வார்த்தை வெளிப்பட்டபோது, அவன் அதற்குக் கீழ்ப்படிந்து ஓடிப்போனான் (ஆதி. 19:7,22). ஒருவேளை, நீங்கள் கேட்க லாம், அவன் தாமதித்தானே என்று. தாமதித்தான் என்று 16-ம் வசனம் சொல்வது உண்மைதான். தாமதித்தற்கான காரணம் நமக்குத் தெரியவில்லை. ஆனால், தேவதிட்டத்தின்படி பட்டணத்தை விட்டு வெளியேற ஏற்கனவே அவன் தீர்மானித்து விட்டான். எப்படியெனில், வசனம் 14 இப்படியாகச் சொல்கிறது. "அப்பொழுது லோத்து புறப்பட்டு, தன் குமாரத்திகளை விவாகம் பண்ணப்போகிற தன் மருமக்கள்மாரோடே பேசி; நீங்கள் எழுந்து இந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்படுங்கள்; கர்த்தர் இந்தப் பட்ட ணத்தை அழிக்கப் போகிறார் என்றான்". இது, லோத்து தன் தவறை உணர்ந்தவனாகவும், தேவ திட்டத்தை ஏற்றுக் கொண்ட வனாகவுமே செயல்பட்டுள்ளான் என்பதையே காட்டுகிறது. தேவ திட்டத்திற்கு மாறாகச் செயல்படும் மனதை உடையவனாக அவன் இருந்திருப்பானானால், பேதுரு அப்போஸ்தலனால் அவன் நீதிமான் என்று அலங்கரிக்கப்பட்டிருக்கமாட்டான். தெரிந்தெடுத்த ஒன்று, செய்த ஒன்று, ஏற்றுக்கொண்ட ஒன்று தவறு என்று தெரியவரும் போது அதை விட்டு ஓடிப்போகவும், விலகவும், மாற்றிக் கொள்ளவும் நாம் எப்பொழுதும் ஆயத்தமா யிருக்க வேண்டும்.

ஏற்றுக் கொண்டதில் தவறு ஏற்படும் போது அதைத் திருத்திக் கொள்ள நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டுமென்ப தற்குப் பவுலடியார் மிகச் சிறந்த உதாரணம். யூத மதத்தில்

அவருக்கிருந்த வைராக்கியத்தை அப். 9:1-2 வசனங்களில் காண முடியும். “சவுல் என்பவன் இன்னும் கர்த்தருடைய சீஷரைப் பய முறுத்தி கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத் திற்குப் போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும், ஸ்திரீகளையாகிலும் நான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்கு கொண்டு வரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்”.

ஆனால், தமஸ்கு செல்லும் வழியில் இயேசுவால் சந்திக்கப் பட்டு, தான் தெரிந்துகொண்ட பக்திக் காரியங்கள் தவறு என்று உணர்த்தப்பட்ட போது (அப். 9:4-5), “அவன் நடுங்கித் திகைத்து; ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர் நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்” (9:6) பின்பு, அவன் அனனியாவால் போதிக்கப்பட்டு ஞானஸ் நானம் பெற்றுக்கொண்டான் (9:18). ஆம், பவுல், சவுலாக இருந்தபோது, தான் தெரிந்தெடுத்த பக்திக் காரியங்களில் தவறு நேர்ந்து விட்டது என்று தெரிய வந்தபோது, தன்னைத் தலை கீழாக மாற்றிக் கொண்டான். இப்படிப்பட்ட மனோபாவம் தான் இன்றைய கிறிஸ்தவத்தின் உடனடித் தேவையாக உள்ளது.

அப்படியானால், அருமையானவர்களே! இக்கட்டுரையை வாசிக்கும் நம் ஒவ்வொருவரின் பக்தி காரியங்களுக்கான தெரிந்து கொள்ளுதல் எப்படியுள்ளது? லோத்துவைப் போல தவறான தெரிந்து கொள்ளுதலிலிருந்து ஓடிப்போகவும், பவுலடி யாரைப் போன்று சரியானதற்கு நம்மை ஒப்புக் கொடுக்கவும் தயாராக உள்ளோமா? சொல்லுங்கள். கிறிஸ்துவின் மார்க்கத்தை ஏற்றுக்கொண்ட பொழுது தனக்கு எப்படிப்பட்ட மனநிலை இருந்ததென்று பவுல் கலாத்தியருக்கு எழுதும் போது, “தம்மு டைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்த போது, உடனே நான் மாம்சத்தோடும், இரத்தத் தோடும் யோசனை பண்ணவில்லை” என்கிறார் (கலா 1:16). அதாவது, தான் ஆவிக்குரிய காரியங்களைத் தீர்மானிப்பதில் யாரோடும் ஆலோசனை கலக்கவில்லை என்கிறார். கிறிஸ்து வுக்கும், கிறிஸ்துவின் உபதேசத்துக்கும் தன்னைக் கீழ்ப்படுத்த வேண்டுமென்பது தான் அவருடைய ஒரே நோக்கமாக இருந்தது.

அருமையானவர்களே, தேவனையும், கிறிஸ்துவையும், கிறிஸ்து கட்டின ஒன்றான மெய்ச் சபையையும், கிறிஸ்துவால் ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட உபதேசத்தையும், நேசிப்பவர் களுக்கு இப்படிப்பட்ட சிந்தை தான் தேவை. ஆம், நம்முடைய பக்திக் காரியங்களை கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத் தோடு ஒப்பிட்டுப் பார்த்து, அறிந்தோ அல்லது அறியாமலோ நடந்து விட்ட எல்லா ஆன்மீக தவறுகளிலிருந்து நம்மை விலக்கிக் கொண்டு, பரலோக பாக்கியத்துக்கான வாழ்வை மேற்கொள்ளுவோம்! ஆமென்!!. ☆

# சிந்தனைக்கான நவீன 10 கட்டளைகள்

1. பிரச்சினை வரும்போது வெளியே இழுத்துப் போடுவதற்கு ஜெபம் என்பது ஓர் "உபரிச் சக்கரம்" (Spare Wheel) அல்ல, மாறாக, முழுவதுமாக சரியான பாதையில் வழிநடத்துகிற "திருப்பும் சக்கரமாக" (Steering Wheel) இருக்கிறது.

2. ஒரு வாகனத்தின் முன்புறக்கண்ணாடி பெரிதாகவும், பின்புறக் கண்ணாடி சிறிதாகவும் இருக்கிறது. ஏனென்றால், நாம் கடந்த காலம், நம் வருங்காலத்தைப் போல அவ்வளவு முக்கியமானதல்ல. எனவே, முன்னோக்கி கடந்து செல்லுங்கள்.

3. நட்பு என்பது ஒரு புத்தகம் போன்றது. அதை எரிப்பதற்கு சில விநாடிகளே ஆகும். ஆனால், அதை எழுதுவதற்கு பல வருடங்களாகும்.

4. வாழ்க்கையில் எல்லாமே தற்காலிகமானது தான். எல்லாம் நன்றாக போகிறதென்றால் அதை அனுபவியுங்கள். அவைகள் என்றென்றும் நீடித்திருக்காது. எல்லாம் நன்றாகப் போகவில்லை யென்றாலும் கவலைப்பட வேண்டாம் அதுவும் என்றென்றும் நீடித்திருப்பதில்லை.

5. பழைய நண்பர்கள் தங்கங்களாக இருக்கிறார்கள்! புதிய நண்பர்கள் வைரங்களாக இருக்கிறார்கள்! உங்களுக்கு வைரம் கிடைக்கும்போது தங்கத்தை மறந்து விடாதீர்கள்! ஏனென்றால், வைரத்தை பிடித்துக் கொள்ள, உங்களுக்கு எப்போதும் தங்க அடித்தளம் தேவை!

6. பெரும்பாலும் நாம் நம்பிக்கை இழக்கும்போது இது தான் முடிவு (End) என்று நினைக்கிறோம், ஆனால், தேவன் மேலே இருந்து புன்னகையுடன் இப்படிச் சொல்கிறார், "பிரியமே, இளைப்பாறு, இது வெறும் வளைவு (Bend) தான் முடிவு அல்ல"!

7. தேவன் உங்கள் பிரச்சனைகளைத் தீர்க்கும்போது, அவருடைய வல்லமையில் உங்களுக்கு நம்பிக்கை வருகிறது; தேவன் உங்கள் பிரச்சனைகளைத் தீர்க்காத போது உங்கள் திறமையில் அவருக்கு நம்பிக்கை இருக்கிறது என்று பொருள்.

8. ஒரு குருடன் ஒருவரிடம் இவ்விதமாகக் கேட்டான்; "கண் பார்வையை" இழப்பதைவிட மோசமானதொன்று இருக்க முடியுமா? என அந்த நபர் பதிலளித்தார்; "ஆம், உங்கள் தரிசனத்தை இழப்பது"!

9. நீங்கள் மற்றவர்களுக்காக ஜெபிக்கும்போது, தேவன் அதற்கு செவி சாய்த்து அவர்களை ஆசீர்வதிக்கிறார். சில வேளைகளில், நீங்கள் பாதுகாப்பாக, மகிழ்ச்சியாக இருக்கும் போது, யாரோ ஒருவர் உங்களுக்காக ஜெபித்திருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

10. கவலை நாளைய பிரச்சனைகளை எடுத்துப் போடுவதில்லை. மாறாக, அது இன்றைய சமாதானத்தை இழக்கச் செய்கிறது.

- தெரிந்தெடுக்கப்பட்டது.

# ஏன் விசுவாசம் முக்கியமானது?

## J.C. சோட்

விசுவாசம் என்றால் என்ன? அதை விளக்குவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா? இதற்கான விளக்கத்திற்கு பெரும்பாலும் எபிரெயர் 11:1க்கு நாம் செல்கிறோம். அங்கே அதன் எழுத்தாளர் இப்படியாகச் சொல்கிறார், "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" என்று. இதை உதாரணத்துடன் விளக்குவதற்கு மாபெரும் மனிதர்களாகிய ஆபிரகாம், மோசே, தாவீது, எலிசா இன்னும் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். நான் அவர்களைப் பார்த்ததில்லை. ஆனால், அவர்கள் வாழ்ந்ததற்கான உண்மைகளும், ஆதாரங்களும் ஏராளமாக வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வேதாகமத்தை சந்தேகப்பட எனக்கு எவ்வித காரணமும் இல்லை. ஆகையால், இது போன்ற சாட்சியங்களை ஏற்றுக்கொள்கிறேன். மேலும், வேத வாக்கியங்களின் மீது எனக்கு இருக்கிற நம்பிக்கையை அடிப்படையாக வைத்து, மேற் கூறப்பட்ட மனிதர்கள் வாழ்ந்தார்கள் என விசுவாசிக்கிறேன். அது போலவே, கிறிஸ்து, பவுல், பேதுரு மற்றும் பலர் முதல் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கிறார்கள் என விசுவாசிக்கிறேன். இந்தக் காரியத்தில் பவுல் எழுதினது சரியாகத் தோன்றுகிறது. "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17).

நான் முகமுகமாகப் பார்த்திராத உலகத்தின் மாபெரும் தலைவர்கள் இருக்கிறார்கள்; ஆனால், அவர்கள் இருக்கிறார்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். அவர்கள் இருப்பதை நான் விசுவாசிக்க சில குறிப்பிட்ட ஆதாரங்கள் என்னை வழி நடத்துகின்றன. அவர்களைப் பற்றிய அறிக்கைகளும், படங்களும் செய்தித்தாள்களில் வருகின்றன. அவர்களை தொலைக்காட்சிகளில் பார்த்திருக்கிறேன், ரேடியோ ஒலிபரப்புகளில் அவர்களுடைய குரலைக் கேட்டிருக்கிறேன். நம்பத்தகுந்த ஆதாரங்களிலிருந்து கிடைத்த இந்த நிரூபணங்கள், சாட்சியங்கள் போன்றவைகளினால் இந்த உலகத்தலைவர்கள் உண்மையானவர்கள் என்று விசுவாசிக்கிறேன்.

அது போலவே, நான் தேவனைப் பார்த்ததில்லை. ஆனால், தேவனை அப்படிப் பார்க்காமலிருப்பது நான் மட்டுமல்ல; யோவான் சொல்லும் போது, 'தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்" என்றார். (1யோவான் 4:12). நான் தேவனை பார்த்திராவிட்டாலும் கூட, அவர் இருக்கிறார் என்று இன்றும் விசுவாசிக்கிறேன் ஏன்? அவர் உண்மையானவர் என்பதை நிரூபிக்க அநேக ஆதாரங்கள் இருக்கிறது. எல்லா சிருஷ்டிப்பும்

இருக்கிறது (ஆதியாகமம் 1:1) பொய்யுரையாத வேதாகமம் அவர் பற்றிச் சொல்கிறது (II தீமோத். 3:16,17). அவர் நமக்கு எவ்வளவு தேவை என்பதையும் வேதாகமம் போதிக்கிறது (எரேமியா 10:23). எபிரெய ஆசிரியர் இப்படி யாகச் சொன்னார். "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயி ருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிற வன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபிரெயர் 11:6).

நாம் குருட்டு விசுவாசம் அல்லது வீணான விசுவாசத்தை உடையவர்களாய் இல்லாமல் இருப்போமாக; நாம் கர்த்தரையும், அவருடைய சித்தத்தையும் நன்றாய் அறிந்து கொள்ளும்படியாக அவர் நம்மிடம் பேசியிருக்கிறார். தேவன் தம்முடைய குமாரன் மூலமாக நம்மிடம் பேசுகிறார். கிறிஸ்து மறுரூபமானபேது, வானத்திலிருந்து இப்படியாக தேவன் பேசினார். " இவர் என்னு டைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று" (மத்தேயு 17:5). எபிரெய ஆசிரியர் சொல்லும் போது, " பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகைவகையாக வும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தர வாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" (எபிரெயர் 1:1,2). ஆனால், தேவன் நம்மிடம் எப்படியாகப் பேசுகிறார்? கிறிஸ்துவின் மூலமாகவும், அவரு டைய வார்த்தைகளின் மூலமாகவும் பேசுகிறார்; கிறிஸ்துவின் புதிய பிரமாணத்தைத் தான் யாக்கோபு சுயாதீனப் பிரமாணம் என்று சொல்கிறார் (யாக்கோபு 1:25). பவுல் சொல்லும்போது, "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டி ருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரி யையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத் தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது" (II தீமோத்தேயு 3:16,17) என்று கூறியுள்ளார்.

பேதுரு அப்போஸ்தலன் இப்படியாகச் சொல்லியுள்ளார். "வேதாகமத்திலுள்ள எந்த தீர்க்கதசரினமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிரென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தி னாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" (II பேதுரு 1:20,21). வேறொரு சந்தர்ப்பத்தில் பேதுரு இப்படியாகச் சொன் னார். " அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிற தும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தி னாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கறீர்களே. மாம்ச மெல்லாம் புல்லைப் போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின்

பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே" (I பேதுரு 1:23-25).

கர்த்தருடைய வார்த்தை நமக்கு எழுத்து வடிவத்தில் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய வார்த்தையை வாசித்து, படித்து, தேவன் இன்று நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார் என அறிந்து கொள்வது உங்கள் கையில் தான் இருக்கிறது. நாம் படிக்க வேண்டும் என்று சொல்கிறார் (II தீமோத்தேயு 2:15) வேத வாக்கியங்களை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று இயேசு தாமே சொல்லியிருக்கிறார் (யோவான் 5:39). ஆனால், நாம் ஏன் தேவனுடைய வார்த்தையை வாசித்துப் படிக்க வேண்டும்? மறுபடியும், தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வதற்கும், அவர் சொல்லியிருக்கிறதை விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிவதற்கும் நாம் வசனங்களைப் படிக்க வேண்டும்.

தேவன் இருக்கிறார் என்பது உண்மையாக இருந்தாலும், அவர் நமக்காகத் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தியிருந்தாலும் கூட, நாம் இரண்டு காரணங்களால் இன்னும் இழந்து போனவர்களாக இருக்க முடியும். முதலாவது, அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைப் பற்றி கவலைப்படாமல் தேவனை விசுவாசிக்க மறுப்பதன் மூலம். இரண்டாவது, மனரீதியாக, ஒருவர் தேவன் இருக்கிறார், கிறிஸ்து அவருடைய குமாரன், வேதாகமம் அவருடைய வார்த்தைகளை உள்ளடக்கியது என ஏற்றுக் கொண்டு கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதன் மூலம். விசுவாசம் மாத்திரம் ஒருவனை இரட்சிக்கிறது என்கின்ற உபதேசத்துக்கு ஆதரவாக இந்த உலகத்தில் அநேகர் உள்ளனர். அவர்கள் விசுவாசம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ள யோவான் 3:16ம் வசனத்தை சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால், இங்கே கேள்வி இதுதான்; நாம் உண்மையிலேயே கர்த்தரில் விசுவாசம் வைத்தால் நாம் என்ன செய்யும்படியாக அவர் கேட்டுக் கொண்டிருக்கிறாரோ அதைச் செய்யமாட்டோமா? அவருடைய உபதேசத்துக்கு கீழ்ப்படிய நாம் தவறினால் அவர் பிரியப்படுகிற விசுவாசத்தை நாம் பெற்றிருக்கிறோம் என்று எப்படிச் சொல்லமுடியும்?

யாக்கோபு விசுவாசத்தின் முக்கியத்துவத்தை இவ்விதமாக விவாதிக்கிறார். " என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? ஒரு சகோதரனாவது, சகோதரியாவது வஸ்திரமில்லாமலும், அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி; நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர் காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னில் தானே செத்தாயிருக்கும். ஒருவன் உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு, கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே

உனக்குக் காண்பிப்பேன் என்பானே. தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய் அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன. வீணான மனுஷனே கிரியைக ளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ? நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலி பீடத்தின் மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான். விசுவாசம் அவனுடைய கிரியைகளோ டேகூட முயற்சி செய்து கிரியைகளினாலே விசுவாசம் பூரணப் பட்டதென்று காண்கிறாயே; அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேத வாக்கியம் நிறைவேறிற்று, அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான். ஆதலால், மனுஷன் விசுவாசத்தி னாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமா னாக்கப்படு கிறானென்று நீங்கள் காண்கிறீர்களே. அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறு வழியாய் அனுப்பி விட்ட போது கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப் பட்டாள்? அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது போல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது" (யாக்கோபு. 2:14-26). இங்கே யாக்கோபு ஆசிரியர் கூறுவது போல், விசுவாசம் உண்டென்று கூறுவது ஒன்று. அப்படி விசுவாச மிருக்கிறதென்பதை நிரூபிப்பது மற்றொன்று. விசுவாசம் மாத்திரம் என்ன செய்ய முடியும்? அதற்கு என்ன மதிப்பு உண்டு? அது செத்த விசுவாசமே. ஆனால், உயிருள்ள விசுவாசம், செயல்படும் விசுவாசம் மற்றும் கிரியை நடப்பிக்கும் விசுவாசம்.

இங்கே, விசுவாசம் கிரியை உடையதாக இருந்தால், இரட்சிப்பு கிருபையினால் வரவில்லை என்று பொருள்பட்டு விடுமா? பவுல் இதுபற்றி இப்படிச் சொல்கிறார். "கிருபையினா லே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்க ளால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" என்று (எபேசியர் 2:8,9). நிச்சயமாகவே, மனிதனால் போதுமான அளவு நற்கிரியைகள் செய்து, அதனடிப்படையில் இரட்சிக்கப் பட்டு, பரலோகம் செல்ல முடியாது. அதுபோலவே, மனிதன் மோசேயின் பிரமாணத்தை கைக்கொள்வதினாலும் இரட்சிப்ப டைய முடியாது. இங்கே, அநேகர் ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஒரு கருத்தை பவுல் சொல்கிறார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று. அப்படியா னால் அதன் பொருள் என்ன? அதன் பொருள், கிருபை தேவனை அடையாளப்படுத்துகிறது, விசுவாசம் மனிதனை அடையாளப் படுத்துகிறது. தேவன் தம்முடைய கிருபையினாலே இரட்சிப்பை நமக்கு அளிக்கிறார், அந்த இரட்சிப்பை தன்னுடைய விசுவாசத் தைக் கொண்டு ஏற்றுக்கொள்வது மனிதனுடைய கையில்தான் இருக்கிறது. தேவன் அதைத் தரும் போது நாம் அதை ஏற்றுக் கொள்ள மறுத்தால், நாம் இரட்சிப்படைய முடியாது. மாறாக, தேவன் அதைத் தரும் போது நாம் அதை ஏற்றுக்கொண்டால்,

அவர் நம்மை இரட்சிக்கிறார். ஆனால், நாம் எப்படி அதை ஏற்றுக்கொள்கிறோம்? அவர் சொன்னதை விசுவாசிப்பதினாலும், நாம் என்ன செய்யும்படியாக சொல்லியிருக்கிறாரோ அதைச் செய் வதினாலும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், நாம் நம்முடைய பங்காக எதையாவது செய்தால், இரட்சிப்பு கிருபையினால் அல்ல என்று பொருள்பட்டு விடுமா? இல்லை, அப்படி இல்லை. எங்களுடைய இரட்சிப்பை நாங்கள் சம்பாதித்து விட்டோம் என்று சொல்லத்தக்க ரீதியில், நாம் ஒரு போதும் தேவனுக்குக் கீழ்ப்படிய முடியாது.

நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திற்கு சென்று அதை வாசிக்கும் போது, வித்தியாசப்பட்ட மனமாற்ற சம்பவங் கள் அங்கே பதிவு செய்யப்பட்டிருக்கிறதைக் காண முடியும். ஒவ்வொரு சம்பவத்திலும் சுவிசேஷம் அல்லது கர்த்தருடைய சித்தமானது, இரட்சிப்பு தேவைப்படும்படியான நிலையிலிருந் தவர்களுக்கு போதிக்கப்பட்டது. தேவனுடைய வார்த்தையை கேட்டதின் விளைவாக அவர்கள் விசுவாசிகளானார்கள். ஆனால், அப்படிக் கேட்ட போது அவர்கள் இரட்சிக்கப்படவில்லை. மாறாக, அவர்களுடைய விசுவாசத்தை அடிப்படையாக வைத்து அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனு டைய குமாரன் என அறிக்கை செய்து, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றதினால் இரட்சிப்படைந்தார்கள். இதை அவர்கள் செய்தபோது, கர்த்தர் அவர்களை இரட்சித்து தம்மு டைய சபையில் சேர்த்தார். குறிப்பாக, அப்போஸ்தலர். 2,8,9,10 மற்றும் 16 அதிகாரங்களை வாசியுங்கள். அங்கே விசுவாசத்தி னால் மாத்திரம் அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்க முடியுமா? இல்லை, அப்படி ஒருவரும் இரட்சிக்கப்பட்டதாக சொல்லப்பட வில்லை. அவர்களுடைய விசுவாசம் அவர்களை கர்த்தருக்குக் கீழ்ப்படிய ஏவும் அளவுக்கு உறுதியாக இருந்தபடியால் தான் அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். இது இன்றும் உண்மையா யிருக்கிறது. ஒருவர் இரட்சிக்கப்பட விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார் (மாற்கு 16:16). ஒருவேளை ஒருவர் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற மனதில்லா தவராக இருந்தால் அவர் இரட்சிக்கப்பட முடியுமா? மாற்கு. 16:16ன் படி அப்படி முடியவே முடியாது. இந்தக் காரியத்தில் அவர் அவிசுவாசியாகத்தான் கருதப்படுவார். ஒருவர் விசுவா சிக்கவில்லையென்றால் அவர் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படு வார். நாம் கர்த்தரை விசுவாசிக்கும் போது, நமக்கு இரட்சிக்கும் விசுவாசம் இருக்கிறபடியால் ஒவ்வொரு காலத்திலும் அவர் என்ன சொல்கிறாரோ அதன்படி செய்வோம்.

உங்களிடத்தில் எவ்வகையான விசுவாசம் இருக்கிறது? உங்கள் விசுவாசம் கிரியை செய்கிற விசுவாசமா? உங்கள் விசுவா சத்தின்படி செயல்பட விருப்பமுள்ளவர்களாயிருக்கிறீர்களா? நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால், அவர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்ளுவார். ★

பெண்கள் பகுதி

# எச்சரிப்பை வெறுத்தவள்

**ரேச்சல் இராஜநாயகம்**

"**ஸ்**திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை" என்று மத். 11:11ல் வாசிக்கிறோம். நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து வுக்கு முன் பிறந்து அவருக்கு வழியை ஆயத்தம் பண்ணினவன் இவன். மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபமாய் இருக்கிறது என்று சத்தமாய் பிரசங்கித்தவன் இந்த யோவான் ஸ்நானன். இவன் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறும்போது, "என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார். அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல...." என்று கூறுகிறான். அதோடு இயேசு கிறிஸ்துவுக்கு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் கொடுத்தவனும் இந்த யோவானே (மாற்கு. 1:9) இந்த மாபெரும் மனிதனுடைய உயிர் நம்மைப் போன்ற ஒரு பெண்ணின் கைக்கு இரையானது என்பதை நினைக்கும் போது வேதனையாய் உள்ளது.

யார் இந்த பெண்? மாற்கு. 6:17-28 வரையுள்ள வசனப் பகுதிகளில் இவள் உள்ளாள். ஏரோது தன் சகோதரன் பிலிப்புவின் மனைவியை தனக்கு மனைவியாக்கிக் கொண்டான். அவள் பெயர் ஏரோதியாள். ஏரோது செய்த இந்த தவறை யோவான் ஸ்நானகன் சுட்டிக்காட்டி, அது நியாயமல்லவென்று கூறுகிறான். இதனால் ஆத்திரமடைந்த ஏரோது யோவானைக் கட்டிக் காவலில் வைத்து விடுகிறான். ஆனால் யோவான் நீதியும், பரிசுத்தமுமுள்ளவனென்று ஏரோது அறிந்து அவனுக்குப் பயந்து, அவனைப் பாதுகாத்து, அவன் யோசனையின்படி அநேக காரியங்களைச் செய்து, விருப்பத்தோடே அவன் சொல்லைக் கேட்டு வந்தான்.

இந்த ஏரோது தன் பிறந்தநாள் விழாவின் போது தன்னுடைய பிரபுக்களுக்கும், சேனாதிபதிகளுக்கும், கலிலேயா நாட்டின் பிரதான மனுஷருக்கும் ஒரு விருந்து பண்ணினபோது, ஏரோதியாளின் குமாரத்தி சபையில் நடனம் பண்ணி, வந்திருந்தவர்களை சந்தோஷப்படுத்தினாள். அப்போது ராஜா உனக்கு என்ன பரிசு வேண்டும்? ராஜ்ஜியத்தில் பாதி கேட்டாலும் அதை உனக்கு தருவேன் என்று கூறினான். இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு ஏரோதியாள் தன் மகளிடம் யோவான் ஸ்நானகனுடைய தலையைக் கேள் என்று கூறி, அவனை சிரச்சேதம் செய்வதற்கு வழி வகுத்தாள்.

இவளின் வஞ்சக வார்த்தைகளைக் கேட்டு ஏரோது பாவஞ் செய்தான். அவனைக் காவல் பண்ணினாலும், அவன்மேல் பட்சமுள்ளவனாயிருந்தான். யோவான் நீதியும், பரிசுத்தமுள்ளவ

னென்று அறிந்திருந்தபடியால் ஏரோது தைரியமுள்ளவனாய் செயல்பட அஞ்சினான். ஆனாலும், பிரபுக்களுக்கும், சேனாதிபதி களுக்கும் மத்தியில் அவன் வாக்குக் கொடுத்து விட்ட படியால், தன்னுடைய கௌரவத்தை தற்காத்துக் கொள்வதற்கு அவள் வேண்டுகோளை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. ஏரோது மன்னனின் யோசனையில்லாத வாக்குறுதியில் ஒரு நீதிமானின் தலை துண்டிக்கப்பட்டது எவ்வளவு கொடுமை.

ஏரோதியாள் தன்னை தவறு என்று சுட்டிக்காட்டிய தேவ மனுஷனை வெறுத்தாள். தன் பாவத்தைச் சுட்டிக்காட்டும் போது அதை ஏற்றுக்கொள்ள மனம் அற்றவளாய் இருந்தாள். இன்றைக்கும் அநேக பெண்கள் தேவனுடைய வார்த்தையை கூறும் தேவ மனிதர்களை வெறுக்கிறார்கள். வசனம் தங்களை எச்சரிக்கும் போது முழுப் பகையாய் அவர்களைப் பகைக்கிறார் கள். இங்கு ஏரோதியாள் தான் பாவம் செய்வதோடு அல்லாமல் தன் மகளையும் அதற்கு உடன்பட வைக்கிறாள். ஒட்டுமொத்த குடும்பமே கொலைகாரர்களாகிவிடுகிறார்கள்.

இன்றைக்கு அநேக பெண்கள் தங்கள் பிள்ளைகளை சபைக்கு விரோதமாய் எழுப்பி செயல்பட வைக்கிறார்கள். ஆதியி லிருந்தே நாம் பார்க்கும்போது தேவனுக்கு கீழ்ப்படியாமல் போகும் போது அது கொலையில் தான் போய் முடிகிறது. ஏவாள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனபோது பாவம் உலகில் பிரவேசித்தது. அதன் தொடர்ச்சியாக சகோதரனே, அவன் சகோதரனை கொலை செய்யும்படியான சூழ்நிலை உருவெடுத்தது (ஆதி. 4:8).

ஏரோதியாள் இவ்வாறு செயல்படக்காரணம் தான் செய்து கொண்டிருந்த பாவத்தை விட்டு விட மனதில்லாததுதான். இன்றும் நம்மில் அநேகர் ஆவிக்குரிய வகையில் பிசாசோடு ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். வசனம் நம்மை எச்சரிக்கிறது. தேவ மனிதர்கள் நம்மை வசனத்தை கொண்டு எச்சரிக்கிறார்கள். எத்தனை பேர் ஏற்றுக்கொள்கிறோம்? இந்த ஏரோதியாள் பாவத் தை நேசித்தாள். தேவ மனிதனை பகைத்தாள். இதை வாசிக்கும் அன்பான சகோதரியே! நாமும் கூட வேதாகமம் நம்மை எச்சரிக்கும் போது, கோபமும், எரிச்சலும் கொள்ளாமல் தாழ்மை யோடு அதை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிந்து, இரட்சிப்பைப் பெறுவோம். எதிர்த்து நின்று தேவ கோபாக்கினையைப் பெற்றுக் கொள்ள வேண்டாம்.

அடுத்து, ஏரோதியாள் தன் மகளையும் தன் தவறுகளுக்குக் கூட்டாளியாக்கிக் கொள்கிறாள். இன்று அநேக தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தவறான கருத்துக்களை போதித்து அவர் களுடைய நல்வழியை திசைதிருப்பி விடுகிறார்கள். சமுதாயத்தி லும், சபையிலும் இதனால் அநேக இடையூறுகள் நேரிடுகின்றன. உண்மையான சத்தியத்தை பரப்புவதற்கு பெற்றோர்கள் தடையாக மாறிவிடுகிறார்கள். அநேக பெற்றோர்கள் தங்கள் தீய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தங்களின் பிள்ளைகளின் செல்வாக்குகளையும், பதவிகளையும் பயன் படுத்திக் கொள்கிறார்கள். பிரபல்யம் அடையவேண்டும் என்ற ஆசையில் பிள்ளைகளை நடனப்பயிற்சி மற்றும் களியாட்டு

களைக் கற்றுக் கொள்ளவும் உற்சாகப்படுத்துகிறார்கள். பெற்றோர்களே பிள்ளைகளுடைய வாழ்க்கையை எவ்வாறு பாழ்படுத்தி அழிவான பாதையில் இட்டுச் சொல்கின்றனர் என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

தாய்மார்களே, நம்முடைய பிள்ளைகளுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு நாம் தடையாக உள்ளோமா? இந்த ஏரோதியாளைப் போல நாம் செயல்பட கூடாது. மாறாக, நம் பிள்ளைகளை கர்த்தருக்காக ஒப்புக்கொடுப்போம். தேவ ஊழியர்களை தாங்கும்படி செய்வோம். அப்போது நம் பிள்ளைகள் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்வார்கள்.

தேவனுடைய மனுஷனை கொலை செய்தாள் என்ற பழிக்கு காரணமாயிருந்தவள் இந்த ஏரோதியாள் என்ற சொல் காலத்திற்கும் அழியாமல் உள்ளது. தயவு செய்து நாம் இப்படிப்பட்ட அநியாயமான செயலுக்கு நம்மை ஒப்புக்கொடுக்காமல், அமைதலும், சாந்தமும் உள்ள இருதயத்தோடு சத்தியம் நம்மை எச்சரிக்கும் போது அதை பக்குவமாய் ஏற்றுக்கொண்டு பாவத்தை விட்டு, பரிசுத்தமாய் ஜீவிப்போம்.

நம் பிள்ளைகளையும் கர்த்தருடைய காரியத்தில் பங்கேற்கச் செய்வோம். அவர்கள் எதிர்த்து நிற்க நாம் ஒரு போதும் அனுமதி தரவே கூடாது. பிள்ளைகளோடு சேர்ந்து வசனத்தை ஏற்றுக் கொண்டு சபையை தாங்குவோம். சத்தியத்திற்காய் வைராக்கிய மாய் இருப்போம். ☆


## திருமறை ஆசான் இதழ் உரிமை பற்றிய அறிக்கை
## திங்களிதழ் விதிப்படிவம்

## Form - IV

வெளியிடும் இடம் : 86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.

அச்சிடுவோர் பெயரும் முகவரியும் : சன் ஆப்செட் பிரிண்டர்ஸ், 50, கோவை ரோடு, காங்கயம் – 638 701.

இந்திய குடிமகனா : ஆம்

ஆசிரியர் பெயர் : S. ராஜநாயகம்

முகவரி : 86-A, தாராபுரம் ரேடு, காங்கயம் – 638 701.

இந்திய குடிமகனா : ஆம்

இதழுக்குரியவர் பெயரும் முகவரியும் : S. ராஜநாயகம், 86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.

ராஜநாயகம் ஆகிய நான் மேலே தந்துள்ள விபரங்கள் நம்பகமும், உண்மையும் உடையவை என உறுதி கூறுகிறேன்.

(ஒப்பம்)

காங்கயம். S. ராஜநாயகம்

வாலிபர் பகுதி

# சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்கள்

**பென்னிமார்ட்டீன்**

**வா**லிபர்களுக்கு நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நீங்கள் இந்த விடுமுறை நாட்களை கோலாகல மாக கொண்டாடிக் கொண்டிருப்பீர்கள். உங்கள் நண்பர்கள் இந்த நாட்களை கேளிக்கைகளிலும், விளையாட்டுக்களிலும், உறவினர் களுடைய இல்லங்களுக்குச் செல்வதிலும் செலவழிப் பார்கள். நீங்கள் இந்த நாட்களை எப்படி பயனுள்ளதாகச் செலவழிக்கப் போகிறீர்கள்? “நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்” என்று வேத வசனம் நமக்கு ஆலோசனைச் சொல்கிறது (எபேசியர் 5:16). இன்னும் உங்கள் நண்பர்களில் சிலர் தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள் வதற்காக கம்ப்யூட்டர் பயிற்சி, ஆங்கிலப் பயிற்சி போன்றவை களை எடுத்துக் கொண்டிருப்பார்கள், அதைத் தவறு என்று சொல்லவில்லை. ஆனால், ஆவிக்குரிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். இந்த கோடைகாலத்தில் ஆங்காங் கே புதிய ஏற்பாட்டு உபதேசப்படி கோடைகால முகாம்கள் நடைபெறும், அதில் கலந்து கொண்டு தேவசமூகத்தில் சில நாட்களைச் செலவுச் செய்யுங்கள். அடுத்த மாதம், ஏலகிரியில் நடைபெறும் வேனிற்கால வேதாகம முகாமில் கலந்து கொள்ளுங் கள். இந்த நாட்களில் பல இடங்களில் சுவிசேஷக் கூட்டங்கள் நடைபெறும். அவைகளில் கலந்து கொண்டால் ஆவிக்குரிய ஆகாரமும், ஆத்தும இரட்சிப்பும் கிடைக்கும். சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களை அனுபவித்தால் தான் அதன் மகத்துவம் விளங்கும். எனவே, நாம் இப்போது சுவிசேஷத்தின் ஆசீர்வாதங் களைக் காண்போம்.

## I. சுவிசேஷத்தின் மகத்துவம்

ஒருவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதால் பாவமன்னிப்பைப் பெறுகிறார். “பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்” என்றார். இதை வேறுவிதமாகச் சொன்னால் சுவிசேஷம் ஒருவரை இரட்சிக்கிறது. அதாவது, ஒருவர் மறுபடி யும் பிறக்கிறார். ஒருவருடைய பாவங்கள் முற்றிலுமாகக் கழுவப் பட்டு, புதிய வாழ்க்கையைத் தொடங்க, புதிய மனிதனாக்குகிறது என்பதை அறிந்து கொள்வது எவ்வளவு அருமையானது. சுவிசே ஷத்தின் மூலமாகத்தான் ஒருவர் கிறிஸ்துவுக்குள் வருகிறார்.

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானாஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (ரோமர் 6:3). நாம் கிறிஸ்வுக்குள்ளிருக்கிறபடியால் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியத்தைப் பெறுகிறோம். நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதினால் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையில் பிரவேசிக்கிறோம். 1 கொரிந்தியர் 12 ஆம் அதிகாரத்தில் பவுல் கிறிஸ்துவின் சரீரத்தைப் பற்றி மிக விவரமாக எழுதியிருக்கிறார். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை தான் உலகத்திலுள்ள எல்லா அமைப்புகளை விட மிக பெரியது, அந்த அமைப்பில் அங்கத்தினராகும் வாய்ப்பை சுவிசேஷம் நமக்கு ஏற்படுத்தித் தருகிறது. சபையை யாராலும் அழிக்க முடியாது. அது என்றென்றும் நிலைத்து நிற்கும். சுவிசேஷம் நம்மை தேவனுடைய பிள்ளைகளாக்குகிறது. ஆகையால், நாம் கிறிஸ்தவர்களாயிருக்கிறோம் இந்த உலகத்திலே நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவதைக் காட்டிலும் பெரிய பாக்கியம் வேறு எதுவும் இருக்க முடியாது. இதைப்பற்றி நீங்கள் சற்று சிந்தித்துப் பாருங்கள் இயேசுவை நாம் விசுவாசித்து, அவருடைய உபதேசங்களுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் அவர் நம்மை கனப்படுத்தி, அவருடைய நாமத்தைத் தரித்துக் கொள்ள நம்மை அனுமதிக்கிறார்.

அடுத்ததாக, சுவிசேஷம் நமக்கு தேவ னை ஆராதிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது (யோவான் 4:23,24). வாரத்தின் முதல் நாள் தோறும் தேவனை ஆராதிக்கும் படி நாம் கூடும் போது தேவனுடைய ஜனங்களோடு ஐக்கியப்படு கிறோம். இதுவும் ஓர் ஆசீர்வாதமாகும். சபை கூடி வருதலை நாம் ஒரு வேலையாக, ஒரு பொறுப்பாக எண்ணாமல் அதை ஒரு சிலாக்கியமாகக் கருத வேண்டும். நாம் அப்படிச் செய்யும் போது கர்த்தர் தாமே நம் கனத்திற்குரிய விருந்தினராக இருப்பதாக வாக்குத்தத்தம் செய்கிறார். "ஏனெனில், இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார் களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்றார் (மத்தேயு 18:20).

## II சுவிசேஷத்தின் தாக்கம்

சுவிசேஷம் நம் வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சுவிசேஷம் இல்லையென்றால் நாம் இன்னும் பாவத்தின் அடிமைத்தனத்தில் தான் இருந்திருப்போம். சுவிசேஷம் மொழி, இனம், நிறம் போன்றவைகளைக் கடந்தது. இன்று கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்த நாமனைவரும் ஒரே குடும்பமாக இருக்கிறோம். உலகெங்கிலும் உள்ள கிறிஸ்துவர்கள் கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகளாக இருக்கிறார்கள். கிறிஸ்தவர்களாகிய நமக்கு சக கிறிஸ்தவர்களுடைய உதவியும்,

உற்சாகமும் அவசியப்படுகிறது. சுவிசேஷத்தினால் நாம் ஜெபிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். தேவன் எல்லோருக்கும் செவி கொடுப்பதில்லை. வேத வசனம் "பாவிகளுக்கு தேவன் செவி கொடுக்கிறதில்லை என்று கூறுகிறது". ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்கு சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிக்கொடுப்பார் என்று சொல்கிறது (யோவான் 9:31). வேறுவிதமாகச் சொன்னால் ஜெபமானது தேவனுடைய பிள்ளைகளுக்கானது. ஆயினும் இந்த ஜெபம் தேவனுடைய சித்தத்திற்கு ஒத்திருக்க வேண்டும் அல்லது தேவனுடைய சித்தத்தின்படி இருக்க வேண்டும். அப்போது தான் அது கேட்கப்படும். தேவன் தமது வார்த்தைகளின் மூலமாக நம்மிடம் பேசுகிறார். நாம் அவரிடம் ஜெபத்தின் மூலமாகவே பேச முடியும். எனவே, ஜெபம் என்பது நமக்கு மிகப்பெரிய ஆசீர்வாதமாக இருக்கிறது. இந்த உலகத்தின் மக்களோடு நம்முடைய எல்லாப் பிரச்சனைகளையும், இன்னல்களையும் பகிர்ந்து கொள்ள முடியாது, அப்படியே பகிர்ந்து கொண்டாலும், நமக்கு முன்பாக பரிதாபப் படுவது போல இருந்தாலும் நம்முடைய முதுகுக்குப் பின்னால் ஏளனம் செய்வார்கள். ஆனால் தேவனைப் பொறுத்தவரை எப்படிப்பட்ட பிரச்சனையாக இருந்தாலும், எத்தனை முறையானாலும் அவரிடம் தெரியப்படுத்தும் போது அவைகளுக்கு தீர்வை ஏற்படுத்துகிறார். நமக்கு இரக்கம் பாராட்டி, பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து நம்மை விடுவிக்கிறார்.

அடுத்ததாக, இந்த மாபெரும் சுவிசேஷத்தை நாம் மற்றவர்களுக்கு அறிவிக்கும் போது கர்த்தர் நம்மோடிருக்கும் ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகமெங்கும் அறிவித்து, அவர்களை கிறிஸ்துவுக்காக ஆதாயம் செய்யும்போது நாம் அவர்களுக்கு ஆசீர்வாதமாக மாறுகிறோம். அதுமட்டுமல்ல, நாம் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றப் பாடுபடும்போது உலகத்தின் முடிவுபரியந்தம் சலக நாட்களிலும் அவர் நம்மோடு கூட இருப்பதாக வாக்குதத்தம் செய்திருக்கிறார். இது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்! (மத்தேயு 28:20).

பிரியமான வாலிபர்களே அநேகர் எவைகளையெல்லாமோ ஆசீவாதங்கள் என நினைத்துக் கொண்டிருக்கிற இந்த நாட்களில் சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களை தேவ வசனங்களின் துணைகொண்டு நாம் பார்த்தோம். நிச்சயமாகவே, சுவிசேஷத்தின் மகத்துவத்தையும், அது நம் வாழ்வில் ஏற்படுத்தியிருக்கின்ற தாக்கத்தையும் நாம் புரிந்துகொண்டால், வாழ்க்கையில் வீணான காரியங்களின் மீது நமது சிந்தையைச் செலுத்தமாட்டோம், மாறாக சுவிசேஷத்தைக் கொண்டு ஆத்துமாக்களை ஆதாயம் செய்து ஞானவான்களாக மாறுவோம். கர்த்தர் தாமே அதற்கு உதவிச் செய்வாராக! ஆமென். ☆

சிறுவர் பகுதி

# இன்ஜினியர் நோவா

**ABEL R. NAYAGAM**

சிறுபிள்ளைகளாகிய நாம் மழை வந்து ரோட்டில் தண்ணீர் புரண்டு ஓடினால் காகிதக் கப்பல் செய்து விளையாடி மகிழ்வோம். அப்படித்தானே. சென்ற மாதம் டாக்டர் லூக்காவிடமிருந்து பாடங்கள் கற்றுக்கொண்ட நாம், இம்மாதம் 40 நாள் பெருமழை வரும் என்று தேவனால் எச்சரிப்பு பெற்று, கொப்பேரு மரத்தால் கப்பல் ஒன்றை கட்டிய இன்ஜினியர் நோவா தாத்தா எப்படிப்பட்டவர் என்று பார்ப்போமா?

நோவா தாத்தாவின் காலத்திலே மனுஷர்கள் ரொம்பக் கொடுமையானவர்களாக, அக்கிரமத்தை அளவில்லாமல் செய்தார்களாம் (ஆதி. 6:5) இப்படிப்பட்டவர்கள் நோவா தாத்தா உத்தமனுமாயிருந்தான் என்று பைபிள் நமக்கு கூறுகிறது. அது மாத்திரமல்ல தம்பிகளே, தங்கைகளே! நாம் நமது நண்பர்களோடு பேசி பழகுவது போல் நோவா தேவனோடு பேசி மகிழ்ந்தார். மனுஷர்கள் எல்லாம் தீமையை, கெட்டப் பழக்கத்தை செய்தபடியால் தேவன் மிகவும் கவலைப்பட்டார் (ஆதி. 6:6) அப்பொழுது தேவன், எல்லா சிருஷ்டிகளையும் அழிக்க வேண்டுமென எண்ணிக் கொண்டிருந்தார். ஆனால், அவருடைய கண்களில் நம்முடைய நோவா தாத்தாவிற்கு மட்டும் கிருபை கிடைத்தது. அது ஏன் தெரியுமா? தம்பி, தங்கைகளே, நோவா, நீதிமானும், உத்தமனுமாயிருந்ததால் தான் அப்படிக் கிடைத்தது, நாமும் அப்படி இருக்க வேண்டாமா? இருக்கனும் தானே.

தேவன், நோவாவை ஒரு பெரிய பேழையை (கப்பலை) கட்டும்படியாகச் சொன்னார். அதைக் கொண்டு நோவா தாத்தாவையும், அவரது குடும்பத்தையும் பெரு மழையிலிருந்து காக்க தேவன் திட்டம் வைத்திருந்ததால் அப்படிச் சொன்னார். நோவா தாத்தா, கஷ்டப்பட்டு உழைத்து தேவ உதவியுடன் பேழையை கட்டிமுடித்த பிறகு, மிருகங்களும், சகல பறவைகளும் பேழைக்குள் சென்றன. (ஆதி. 7:9) அந்த பேழை எவ்வளவு பெரிசு தெரியுமா? 450 அடி நீளம், 75 அடி அகலம், 45 அடி உயரமாம் பிள்ளைகளே, அதில் 3 அடுக்குகளும், நிறைய அறைகளும் இருந்ததாம் (ஆதி. 6:14-16). அந்த பேழையில் சுமார் 1000 ரெயில் பெட்டிகளை வைக்கலாமாம். அப்பாடி! எவ்வளவு பெரிதென்று பார்த்தீங்களா!!

பேழைக்குள் எல்லோரும் போன பின், சில நாட்கள் கழித்து தேவன் பூமியின் மேல் பெருவெள்ளத்தை வரப் பண்ணினார். மழை 40 நாட்கள் இரவும் பகலும் சோ வென்று

அடித்து கொண்டே இருந்தது. எங்கு பார்த்தாலும் வெள்ளம், ஆனால் பேழைக்குள்ளிருந்த நோவாவையும் அவன் குடும் பத்தையும் தேவன் அன்பாக பாதுகாத்தார். (ஆதி. 7:4-24).

மழை பெய்து முடிந்து, தண்ணீர் வடிய தொடங்கியது, தாத்தாவின் கப்பல் அரராத் என்னும் மலையின் மேல் தங்கிற்று. சில நாட்கள் கழித்து பேழையில் இருந்த எல்லாம் மகிழ்ச்சியுடன் புதிய உலகிற் குள் இறங்கின. கெட்டவர்கள் எல்லாம் அழிந்து போனார்கள். நோவா தனக்கு நல்லது செய்த தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று எண்ணி, சுத்த மான மிருகங்களிலும், பறவை களிலும் சிலவற்றை தகன பலியாக பலியிட்டான்.

நமது தேவன் இரக்கம் உள்ளவராக இருக்கிறதினால், இனி நான் தண்ணீரால் உலகத்தை அழிக்க மாட்டேன் என்று உடன்படிக்கை செய்தார். இன்றைக்கு மழை வந்தால், வானத்தில் நாம் பார்க்கிறோமே வானவில் அதை அந்த உடன் படிக்கைக்கு அடையாளமாக வைத்தார். தேவன் சொன்னபடி கப்பலை கட்டின இன்ஜீனியர் நோவாவிடம் என்ன பாடம் கற்றுக்கொள்கிறோம் என்று பார்ப்போம்.

1. நாம் நீதிமான்களும், உத்தமர்களுமாயிருக்க வேண் டும்.

2. தேவனுக்கு கீழ்ப்படிந் திருக்க வேண்டும்.

3. தேவனுக்கு நன்றி செலுத்து கிறவர்களாக இருக்க வேண்டும்.

வானத்தில் நாம் பார்க்கும் வானவில் நமக்கு என்ன சொல்கிறது.

1. நாம் தேவனுக்கு உண்மை யாக இருக்க வேண்டும்.

2. தேவன், தான் செய்த உடன்படிக்கையை காப்பாற்று வார் என்று சொல்கிறது.

சரி, தம்பி, தங்கைகளே, நாம் இம்மாதம் கற்றுக் கொண்ட பாடங்களை கடைபிடித்து தேவனுக்கு பிரியமான பிள்ளை களாக வாழ்வோம்.

சிறு பிள்ளைகளாகிய நம்மை பரலோகத்தின் தேவன் ஆசீர்வதிப்பாராக! ☆

மனன வசனம் நீதி. 20:7

## நாளும் நடப்பும்

1. ஏப்ரல் 13-ம் தேதி தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு அமைதியாக முடிந்தது.
2. ஒரு மாதம் கழித்துத்தான் தேர்தல் முடிவு என்பது இதுவரை இல்லாதது.
3. எந்தக் கட்சிக்கும் பாரபட்சம் காட்டவில்லை-தலைமை தேர்தல் ஆணையர்.
4. ஊழலுக்கு எதிரான "லோக்பால்" மசோதாவை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.
5. ஜப்பானை சுனாமி துரத்தி துரத்தித் தாக்குகிறது.
6. தோல்விக்குப் பிறகு பதவி விலக மறுத்த ஐவரிகோஸ்ட் அதிபர் கைது.
7. 28 ஆண்டுகளுக்குப் பிறகு கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டியில் இந்தியா வெற்றி.

# உங்களுக்குத் தெரியுமா?

## K. பாண்டியன்

நம்முடைய வாழ்வில், செய்திதாள்கள், தொலைக்காட்சி பெட்டிகள், இணையதளம் மற்றும் மற்றவ ரோடு உரையாடுதல், சொந்த அனுபவங்கள் மூலமாக நாம் அநேக காரியங்களை அறிந்து வைத்திருக்கிறோம். ஆனால் சபையில் இருக்கும் விசுவாசிகள் சிலவற்றை அறிந்து அதன்படி நடக்க வேண்டும் என தேவனுடைய வார்த்தைகள் நமக்கு எடுத்துரைக் கின்றது. அவைகளை அறிவதன் மூலமாக நாம் தேவனுடைய சித்தத்தை அறிகிறோம். பிதாவின் சித்தப்படி செய்கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பான் என்ற ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகளை நினைவு கூர்ந்து நாம் அவருடைய வார்த்தை களுக்குச் செவிகொடுப்போமாக.

**I. உங்கள் மீட்பரையும் அவரை ஒருநாள் சந்திப்போம் என்பதையும் அறிந்திருக்கிறீர்களா? யோபு 19:25,26**

தேவனுடைய உத்தமதாசனாகிய யோபு இக்காரியத்தைக் குறித்து பேசுவதை நாம் காண்கிறோம். அநேக, கொடிய வேத னை மற்றும் உபத்திரவத்திலிருந்த யோபுவின் வாயில் இருந்து வந்த இந்த வார்த்தைகள் அவருடைய விசுவாசத்தை வெளிப் படுத்துகிறது. தேவன் மனிதனோடு தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்ட பிதாக்களின் காலத்தில் இந்த தீர்க்கதரிசன வார்த்தைகளை யோபு சொன்னது நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. நியாயப்பிரமாண காலகட்டத்தில் மோசேயின் மூலமாகக் கேள்விப்பட்ட மேசியாவாகிய கிறிஸ்து வருவார் என்று யூதர்களும் எதிர்பார்த்திருந்தனர் (யோவான் 4:10) சமாரிய ஸதிரீயிடம் ஆண்டவர் இயேசு தம்மைப்பற்றி அவள் அறிந்திருந் தால் அவரே அவளுக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுக்க வல்லவர் என்பதையும் தெளிவுபடுத்தினார். இன்றைக்கு அநேகர் ஆண்ட வரை ஒரு விக்கிரகத்திற்கு சமமாக பாவித்து, பொய்யான அற்பு தங்களையும், அடையாளங்களையும் இருப்பதாக காண்பித்து ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். மாறாக இயேசு ஆண்டவர் என்றும், பாவத்திலிருந்து மீட்கக்கூடிய ஒரே இரட்சகர் என்றும் அவரே தேவனுடைய குமாரன் என்றும் தெரிந்திருக்க வேண்டும் மட்டுமல்ல அவருடைய உபதேசத்தைக் கைக்கொள்வதே நாம் அவரை அறிந்திருப்பதற்கான அடையாளமாகும். (1யோவான் 2:4-6).

## II. நீங்கள் ஆராதிக்க வேண்டிய தேவனை அறிந்திருக்கிறீர்களா? (யோவா 17:3)

இயேசுக் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு உண்மையாய் ஒருவர் செவி கொடுக்கும் போது நாம் வணங்க வேண்டியவர், இயேசுக் கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பிய பிதாவாகிய தேவன் என்றும் உருவமில்லாத அவரை நம் உள்ளான இருதயத்தி லிருந்து பாடி, ஜெபித்து, வாரத்தின் முதல் நாளில் கூடி வந்து தொழுது கொள்ள வேண்டும் என்றும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். இயேசப்பாவை அல்ல, இயேசுவுக்கு அப்பாவையே நாம் வணங்க வேண்டும் என்பது இயேசுக் கிறிஸ்துவின் கட்ட ளை (யோவா. 4:24) நம் விசுவாசம் ஆண்டவர் இயேசுவிடம் மாத்திரமல்ல, பிதாவாகிய தேவனிடமும் இருக்க வேண்டும் (யோவான் 5:24) இயேசுவின் மூலமாகவே நாம் அந்த தேவ னை தொழுது கொள்ள வேண்டும் (எபேசி 3:20,21) மாறாக, யூத மதம் மற்றும் முஸ்லீம்கள், யேகோவா சாட்சியினர் போன்று தவறு செய்யக்கூடாது. இயேசுவல்லால் அந்த ஒரே தேவனை யாரும் தொழுது கொள்ள இயலாது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். தேவனை அறியாவதர்களுக்கு தண்டனை உண்டு (II தெச. 1:7).

## III. உங்கள் சரீரம் கிறிஸ்துவுடனே சிலுவையில் அறையப்பட்டது என்று அறிந்திருக்கிறீர்களா? (ரோம 6:6)

கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று இருக்கிறோம். ஆகவே, நாம் பாவத்திற்கு மரித்தவர்களாகவும் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ள வேண்டும். ஆனால், சிலர் மற்றவர் செய்யும் மீறுதல்களை கவனித்து சபை யில் தாங்களும் கெட்டுப் போகிறார்கள். விசுவாசிகள் தவறு செய் வதற்கு சில ஒழுங்கற்ற சகோதர சகோதரிகள் காரணமாகும் போது ஆண்டவர் அதைக் குறித்து இவ்வாறு எச்சரிக்கின்றார்:- என்னிடத் தில் விசுவாசமாயிருக்கிற இந்த சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி சமுத்திரத்தி லே போடுவது நலம் (மத். 18:6,7) அவனுக்கு ஐயோ (நரகம்) என்றார். எனவே விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தை மற்றவர்கள் கெடுத்துப் போட இடம் கொடாமல் கிறிஸ்துவையே மாதிரியாக நோக்கி தேவன் தனக்கு அளித்திருக்கும் பரிசுத்த ஆவியானவர் உதவியோடு சீராக நடந்து கொள்ள வேண்டும் (யாக். 4:4,5) பொதுவாக விசுவாசிகளுக்கு இடறல் உண்டாக்க பிசாசானவன் மற்ற விசுவாசிகளையே பயன்படுத்துகிறான். எனவே தான், பேதுரு தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் என்று எச்சரிக்கின்றார் (1பேது 5:8) வேதத்தில் விழித்திரு என்ற வார்த்தை பொதுவாக பாவஞ்செய்யாமல் வாழும் வாழ்க்கையை

அடையாளப்படுத்துகிறது. நீதிமான் ஒருவனுமில்லை, எல்லோரும் பாவிகள் என்ற வசனம் கிறிஸ்துவுக்கு முன் ஒருவனுக்கு பொருந்தும் ஞானஸ்நானத்திற்குப்பின் நாம் பாவமில்லா வாழ்க்கையை தெரிந்த கொள்ள வேண்டும் (1 யோவா 3:9) அந்த பாவமில்லா வாழ்வுக்காக போராடுவதே நம் சபை வாழ்வின் முக்கியக் குறிக் கோளாகும் (எபி. 12:1-4).

## IV. நீங்கள் சத்தியத்தை அறிந்திருக்கிறீர்களா? (யோவான் 8:31,32)

தேவனைப் பற்றியும், பக்திக்குரிய காரியங்களைப் பற்றியும் உலகில் அநேக உபதேசங்கள் இருக்கின்றன. ஆகவே தான் மனிதன் தேவனை வணங்கும் முறைகள், வீட்டுக்கு வீடு, நாட்டுக்கு நாடு வேறுபடுகிறதை நாம் காண்கிறோம். ஆனால் மனிதன் வணங்க வேண்டியது ஒரே தேவன், காணமுடியாத அந்த தேவனை மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தவே அவருடைய மகனாகிய இயேசு நம்மைப் போல் மாம்சத்தில் வந்தார். அவருடைய வார்த்தைகளே சத்தியமாயிருக்கிறது (யோவா 14:6) அதை அறியாத பட்சத்தில் ஒருவன் பாவத்திற்கு அடிமையாய் இருக்கின்றான். தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி இரட்சிப்பவர் என்ற அர்த்தமுடைய இயேசு என்ற நாமமேல்லாமல் வேறொருவராலும் ரட்சிப்பு இல்லை. அந்த ஆண்டவர் இயேசு கட்டியக் கிறிஸ்துவின் சபையே உண்மையான (மத். 16:18) சபையாகும். அந்த சபை மாத்திரமே அப்போஸ்தலருடைய உபதேசத்தின் அடிப்படையானது. சிலர் பெயரளவில் அப்போஸ்தலர் என்பதை சபையோடு இணைத்து பெயர் வைக்கின்றார்கள். ஆனால் சபைக்காக மரித்தவர் கிறிஸ்துவே சபைக்கு முலைக்கல் அவரே, புதிய ஏற்பாட்டு உபதேசத்தின் மத்தியஸ்தர் ஆண்டவர் இயேசு மாத்திரமே. (1 தீமோ 2:5) எனவே, கிறிஸ்துவின் சபை என்பதே சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாக உள்ள தேவனுடைய வீடாக இருக்கிறது (1 தீமோ 3:15) வேதத்தை அறிந்தவர்கள் இந்த சத்தியத்தை தெரிந்து கொண்டு விடுதலையாக வேண்டும் என்பதே கிறிஸ்துவின் போதனையாக இருக்கின்றது. சபையில் இருப்பவர் மற்ற புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையில் நடப்பதை போல நடவாமல் இயேசுவினிடத்தில் கற்றுக் கொண்ட சத்தியத்தில் நடக்க வேண்டும் (எபேசி 4:20,21) சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு மனப்பூர்வமாய் பாவஞ் செய்கிற விசுவாசிக்கு மன்னிப்பு இல்லை (எபி. 10:26, 27) நாம் தண்டனைக்குத்தப்பும்படியாகவே தேவன் நம்மை சபையில் சேர்த்துள்ளதால் சத்தியத்தில் நடக்கப் பிரியப்படுவோம்.

## V. சகோதர அன்பே "ஜீவன்" என்பதை அறிந்திருக்கிறீர்களா? (1 யோவான் 3:14)

நாம் சபையில் விசுவாசிகளாயிருக்கையில் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பதே நம் எஜமானின்

கட்டளையாக இருக்கிறது (யோவா 13:34) சபையில் கருத்து வேறுபாடுகள் வருவதற்கு முக்கியக்காரணம் மற்றவரைவிட தாமே மேலானவர்கள் என்ற எண்ணமும், ஆவிக்கேற்றபடி சிந்தியாமல் இருப்பதும், முக்கியமாக தேவனுடைய வார்த்தைகளை அறியாமலும் மதியாமலும் இருப்பதேயாகும். எப்படியிருப்பினும் ஆவிக்குரியவர்களாகிய நாம் கிறிஸ்துவின் சிந்தைபடி தாழ்மையாக, மற்றவரை மன்னிக்கிறவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. அதே நேரத்தில் நாம் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாக நடப்பவர்களிடமிருந்து நாம் விலகியிருக்க வேண்டும் (ரோம 16:17) மற்றபடி தனிப் பட்ட முறையில் கசப்பு, விரோதம் கூடாது (யாக். 3:13-18) ஏனெனில் தன் சகோதரனில் அன்பு கூராதவன் பிசாசின் பிள்ளை (1யோவா 3:10) என்று வேதம் எச்சரிக்கின்றது. பொருளாதார கொடுக்கல் வாங்கலில் சில நேரங்களில் அன்பு தடை செய்யப் படுகிறது. அப்போஸ்தல உபதேசப்படி ஒரு கிறிஸ்தவன் மற்றவரிடத்தில் கடன் வாங்காமல் இருப்பதே உத்தமம். ரோமர் 13:8ல் பவுல்; ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் என்று உபதேசிக்கின்றார். நாம் அப்படி வாழ்ந்து முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தைத் தேடும் போது நிச்சயமாக ஆண்டவர் இயேசுவின் வாக்குதத்தின்படி நம் தேவைகள் நமக்கு சந்திக்கப் படும் என்பதில் சந்தேகமில்லை. (மத். 6:33). நாம் கிறிஸ்துவின் சாயலில் வளர அழைக்கப்பட்டு உள்ளோம் அப்படியிருக்க நம் வாழ்வில் நடக்கும் சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கிறதை நாம் அறிய வேண்டும் (ரோம 8:28) மாயமற்ற சகோதர சிநேகம் என்பது ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய உபதேசம் மற்றவருக்கு தீங்கு செய்யாதிருப்பதே மாயமற்ற சிநேகமாகும் (1 கொரி. 13:4-6).

**VI. பரலோகில் நித்திய வீடு இருப்பதை அறிந்திருக்கிறீர்களா? (II கொரி. 5:1)**

இந்த நினைப்பு இருக்கும் போது மாத்திரமே ஒரு கிறிஸ்தவன் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவைப் பின்பற்ற முடியும். இல்லையெனில் பூமியின் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, சுயநலம், பொறாமை போன்ற எண்ணங்களால் ஆட்கொள்ளப்பட்டு அவனால் ஒரு சரியான கிறிஸ்தவனாக வாழமுடியாமற் போகிறது. எனவே தான் ஆண்டவர் நம் சிந்தையை மாற்ற நம் பொக்கிஷங்களை பரலோகத்திலே சேர்த்து வைக்கும்படியாக அறிவுறுத்துகிறார் (மத். 6:19-21) நாம் கிறிஸ்துவின் உபதேசப்படி வாழ்வதே, நம் பொக்கிஷங்களை பரலோகில் சேர்த்து வைப்பதற்கு சமமாகும்.

கிறிஸ்துவின் உபதேசம் நம்மை சாந்தத்தோடும், தாழ்மையோடும் வாழ்ந்து, உலகக் கவலைகளை நீக்கி, நீதியினிமித்தம் நிந்தை அனுபவித்து, உறுதியோடு கிறிஸ்துவை பின்பற்ற நம்மை வழி நடத்துகிறது. நம் வாழ்வைக் கண்டு மனிதன் அல்ல, அந்தரங்கத்தில் பார்க்கிற நம்பிதா நமக்கு கொடுக்கும் பலன் மிகுதியாய் இருக்கும். ஆக நம்மால் முடிந்த உதவிகளை விளம்பரமில்லாமல் ஏழைகளுக்கு செய்து, நமக்கு விரோதமான வர்களை மன்னித்து அவர்களுக்காக வேண்டுதல் செய்து நாம் கிறிஸ்துவை பின்பற்றும் போது நம் பொக்கிஷம் பரலோகில் சேர்த்து வைக்கப்படும்.

## VII. வருகையில் கிறிஸ்துவுக்கு ஒப்பாயிருப்போம் என்பதை அறிந்திருக்கிறீர்களா? (1 யோவா. 3:1–3)

ஒரு சபையானது பரிசுத்தத்திலே வளர வேண்டும் என்பதே தேவனுடைய திட்டமாகும். நாம் பரிசுத்தமாயிருக்க வேண்டியதின் முக்கியக்காரணம் என்ன? நாம் வணங்கும் தேவன் பரிசுத்தர். ஆகையால், அவர் நம்மையும் பரிசுத்தராயிருக்கும்படி கட்டளையிடுகிறார் (1பேது. 1:16) ஞானஸ்நானத்தில் ஒருவரின் கடந்த கால பாவங்கள் மட்டுமே மன்னிக்கப்படுகிறது என்பதை புரிந்து கொள்ளுங்கள். அது இனியும் பாவம் செய்யலாம் இயேசு மன்னித்து விடுவார் என்ற “லைசென்ஸ்” அல்ல! ஞானஸ்நானத்திற்கு பின்பு நாம் செய்யும், நன்மை, தீமைகளுக்கு தக்கப் பலனை அடையும்படி (விசுவாசியும் கூட) கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் (2 கொரி. 5:10) இதையே பேதுரு அப்போஸ்தலர் நியாயதீர்ப்பு தேவனுடைய வீட்டில் (சபையில்) துவங்கும் என்று எச்சரிக்கின்றார் (1பேது 4:17) நம் சபையில் வாரந்தோறும் அப்பம் பிட்கும்படி கூடிவரும் போது, நம்மை நாமே சோதித்தறிந்து பங்குபெற வேணடும் என்பது நமக்கு இடப்பட்ட கட்டளையாகும். அது நம்மிடம் காணப்படும் தேவனுக்கு விரோதமான காரியங்களை நாம் அறிக்கை செய்து விட்டு விட வேண்டும் என்பதற்காக தேவன் ஒவ்வொருவருக்கும் கொடுக்கும் வாய்ப்பாகும் (1 யோவா 1:6-10) அதை அசட்டை செய்பவர் தண்டிக்கப்படுவார்கள் என்பதை ஆண்டவர் முன் கூட்டியே கலியாண அழைப்பு உவமையால் உபதேசித்து இருக்கின்றார். (மத். 22:5,13) ஆக, வருகையால் நீங்கள் கிறிஸ்துவுக்கு ஒப்பாயிருக்க வேண்டுமானால் தேவனுக்கு விரோதமான மாம்ச சிந்தை மற்றும் உலக சிநேகத்திற்கு விலகியிருந்து கிறிஸ்துவின் உபதேசத்தைப் பின்பற்றி உபத்திரவத்தில் பொறுமையாயிருந்து உள்ளான மனுஷனில் நாளுக்கு நாள் புதிதாக்கப்பட தேவன் தாமே கிருபை செய்வாராக. ஆமென். ☆

தொடர் கட்டுரை

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

K. பாஸ்கர்

## பாடம் - 6. வேற்றுமை உணர்வுகள்

அன்பான வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த தொடர் கட்டுரையின் மூலமாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாம் வாழும் சமுதாயத்தில் பல பிரிவினைகள் இருப்பது போல, கிறிஸ்தவத்திலும் பல பிரிவுகள் காணப்படுகிறது. ஆனால், தேவன் நம்மை ஒற்றுமைக்காக அழைத்திருக்கிறார் (1கொரி. 1:9,10) வேற்று மை உணர்வுகளை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும். இயேசு கட்டிய வசன ரீதியான கிறிஸ்துவின் சபை அமைப்பதே நமது நோக்கமாக இருக்க வேண்டும். அதற்கு இந்தப் பாடம் உதவியாக இருக்கும்.

### I மொழி வேற்றுமை

இவ்வுலகத்திலே காணப்படுகின்ற மொழிகள் எல்லாம் தேவனால் உண்டாயிருக்கிறது. ஆகவே என்னுடைய மொழி உயர்ந்தது என்றும் உன்னுடைய மொழி தாழ்ந்தது என்றும் மனிதன் நினைக்கக்கூடாது. உலகில் மொழி வேற்றுமை உண்டு. அதனால் சண்டைகளும், யுத்தங்களும் உண்டாகுகின்றது. இலங்கையில் 30 ஆண்டுகளுக்கு மேல் சண்டைகளும், கலவரங்களும், துப்பாக்கி சூடும் ஏன் நடக்கிறது என்றால் இந்த மொழி வேற்றுமையால். இவ்வுலகத் திலுள்ள அனைத்து மொழிகளையும் உண்டாக்கினவர் தேவன்.

தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வந்தார். அவர் சிலுவையிலே சிந்திய இரத்தத்தினா லே வேற்றுமை உணர்வுகளை எல்லாம் முறியடித்தார். (எபே. 2:16) இயேசு கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்து 40 நாள் தன்னை உயிரோடு இருக்கிறவராய் காண்பித்தார் (அப். 1:3) இந்த நாட்களில் இயேசுவோடு சீஷர்கள் இருந்தனர். ஆனால், துக்கத்தோடு இருக்கவில்லை இந்த நாட்கள் லெந்து நாட்களாக வேத வசனம் கூறுவதில்லை. துக்கத்தோடு இருப்பதற்கு இயேசு மரித்தோரிடம் இல்லை. அவர் உயிர்த்தெழுந்த ஆண்டவரும், கிறிஸ்துவும் ஆனார் (அப். 2:36) அவர் ஒரு தரம் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டார் உயிர்த்தெழுந்தார். அப்படி யிருக்க அவ்ரை பலமுறை சிலுவையிலே அறையக்கூடாது. அப்படிச் செய்கிறவர்கள் மறுதலித்துப்போனவர்கள் என்று வேதம் அவர்களைக் குறித்து கூறுகிறது (எபி. 6:6).

ஆண்டவர் உயிர்த்தெழுந்து புதிய பிரமாணத்தைக் கொடுத்தார். அதில் நீங்கள் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற். 16:15,16) அதன்படி உலகமுழுவதும் சுவிசேஷம் பரவியது. பல மொழிகளையுடையவர்கள் கிறிஸ்துவின் சபையிலே சேர்க்கப்பட்டார்கள் (அப். 2:8-47) சகல பாஷைக்காரரும் இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு தேவனை புகழ்ந்து பாடினார்கள் (வெளி. 5:9,10).

மொழி வேற்றுமையால் தேவனுடைய சித்தத்தை மறந்து மாம்ச சிந்தையாக இருக்கக் கூடாது. மாம்ச சிந்தை மரணம் ஆவியின் சிந்தையோ ஜீவனும், சமாதானமுமாம் மொழி வேற்றுமை என்று மாம்ச சிந்தை. எல்லா மொழிகளையும் நேசிப்பது என்பது ஆவியின் சிந்தையாக இருக்கிறது. யார் எந்த மொழி பேசினாலும் அவர்கள் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்திருந்தால் அவர்கள் நமக்கு சகோதர, சகோதரிகளாக இருக்கிறார்கள். (1தீமோ. 5:1,2) உலகத்தார் மொழி வேற்றுமையால் சண்டைகளும், யுத்தங்களும் போட்டுக் கொள்வது போல சபையிலும் இருக்கக் கூடாது எல்லா மொழி பேசுகிறவர் களையும் நேசிப்போம்.

## II இன வேற்றுமை

யூதர்களிடம் யூதர், புறஜாதி என்கிற இனவேற்றுமை அதிகமாகக் காணப்பட்டது (அப். 10:28) இயேசு கிறிஸ்து யூதராக வந்தும் அவரை யூதர்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருந்ததற்கு காரணம். அவர் யூதர்களால் பாவிகள் என்று வெறுக்கப்பட்டவர்களை அவர் ஏற்றுக்கொண்டதுதான். (மத். 9:10,11) இதற்கு அடிப்படையாக யூதர்களிடத்தில் காணப்பட்ட இன வேற்றுமையாகும். இந்த இன வேற்றுமையால் யூதர்களில் சிலர் இயேசுவை விசுவாசித்தனர். ஆனால், அறிக்கையிடுவதற்கு பயந்திருந்தனர் (யூதர்களுக்கு) ஆதலால், நிக்கொதேமு என்பவர் பகலில் இயேசுவைப் பார்க்க வராமல் இரவிலே வந்தார் (யோ. 3:1,2) இந்த இன வேற்றுமையை கிறிஸ்து வெறுத்தார். பாவிகளை ஏற்றுக்கொண்டார் (லூக். 15:2) இதனால் ஜனங்களில் அநேகர் அவரைப் பின்பற்றினார்கள் அதனால் அவர் மேல் பொறாமை கொண்டனர் யூதர்கள். இந்த பொறாமை ஆண்டவரை சிலுவையில் அறையும்படி யூதர்கள் வலியுறுத்தினார் கள் (மத். 27:17). இன வேற்றுமையானது எவ்வளவு கொடூரமாக இருக்கிறது என்று யோசித்துப் பாருங்கள்.

தேவன் இன வேற்றுமைகளை தமது குமாரன் இயேசு கிறிஸ்துவினால் அழித்தார். எப்படியெனில் சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து இரு திறத்தாரையும் (யூதர்-புறஜாதி) தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து இப்படிச் சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினாலே கொன்று அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீர மாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபே. 2:15,16). இந்த வசனப்

பகுதியில் இன வேற்றுமையானது பகையாக இருக்கிறது. யூதர், புறஜாதி என்ற வேற்றுமையை நீக்கி ஒரே இனமாக, ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார் என்று கூறுகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிந்திய இரத்தத்தினாலே இன வேற்றுமையை நீக்கினார். இனி கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளு கிறவர்கள் யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை. எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாக இருக்கிறார்கள் (கலாத். 3:26-28).

அப்போஸ்தலனாகிய பேதுருவும் புறஜாதியாக இருந்த கொர்நெலியு என்ற மனுஷரிடத்திற்குச் சென்று தேவன் பட்சபாத முள்ளவரல்ல என்றும் எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்தி ருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்த வன் என்று நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் என்றார் (அப். 10:34,35) எனவே கிறிஸ்துவுக்குள், கிறிஸ்துவின் சபையிலே இன வேற்றுமை கூடாது என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. இருப்பினும் மனித பாரம்பரியங்களுக்கு பயந்து கொண்டு சில கிறிஸ்தவர்கள் இன வேற்றுமைகளைப் பார்க்கின்றனர். இந்த இன வேற்றுமை கொஞ்சம் கொஞ்சமாக சபைக்குள் புகுந்து விடுகின்றன. ஒரே இனத்தைச் சார்ந்த வர்கள் சபையை பிரித்து, தங்கள் இனத்திற்கு என்று தனியாக சபை யை வைத்துக் கொள்ளுகிறார்கள். இது தேவனுக்கு விரோதமான செயலாக இருக்கிறது. இது மாம்சத்தின் கிரியையாக உள்ளது. (1கொரி. 3:4) இப்படிப்பட்ட சபையை உற்சாகப்படுத்துகிறவர் அவர் களுடைய இனமாக உள்ளார். இது சபையை உற்சாகப்படுத்தவில்லை தங்கள் இனத்தை உற்சாகப்படுத்துகிறார்கள். இன வேற்றுமைகளை உற்சாகப்படுத்துகிறார்கள். இது வசன ரீதியான கிறிஸ்துவின் சபை இல்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இன வேற்றுமை திருமணத்தின் போது பார்க்கின்றனர். இவ்வுல கத்தில் காதல் திருமணங்களை ஏன் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றால் அவர்கள் இன வேற்றுமையை பார்ப்பதில்லை. ஆதலால் அரசாங்கம் அவர்களை ஏற்றுக்கொள்கிறது. உலகப் பிரகாரமாக உள்ள ஒரு அரசாங்கம் இன வேற்றுமையை ஒழிக்க காதல் திருமணங்களை ஏற்றுக்கொள்கிறது. ஆவிக்குரியவர்களாகிய நாம் பெற்றோர்களால், தேவ சமூகத்தில் நடத்தப்படும் திருமணத்தில் இன வேற்றுமை ஒழிக்க வேண்டும். ஒரே இனமாக கிறிஸ்துவின் சபையிலே திருமண ஒப்பந் தங்களை ஏற்படுத்தி மாம்சத்திற்குரிய இன வேற்றுமையை ஒழிப்போமாக! (2கொரி. 6:14,18).

**III நிற வேற்றுமை**

மொழியாலும், இனத்தாலும் ஒன்றுபட்ட நாம் நிறத்தால் ஒன்றுபட்டிருக்கின்றோம். ஒருவேளை இந்தியாவில் இந்த நிற வேற்றுமை அதிகமாக இல்லை. ஆனால், வெள்ளைக்காரர்கள் மத்தியிலே இந்த நிற வேற்றுமை அதிகமாக உள்ளது. கருப்பர், வெள்ளையர் என்ற பாகுபாடு உண்டு. நிறங்கள் தேவனுடைய படைப்பை விவரிக்கின்றன. மரம், செடி, கொடிகளுக்கு தேவன் தமது

சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார். விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் அதற்கேற்ற மேனியையே கொடுக்கிறார் (1 கொரி. 15:32) பல நிறங்கள் கொண்டு எல்லா உயினங்களும் தேவனை மகிமைப்படுத்துகிறது (சங்கீதம் 148,7-10).


நாமும் பல நிறங்களையுடையவர்களாக இருக்கிறோம். ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு கால நிலை ஏற்படுகிறது. உஷ்ணம் அதிகமாக இருக்கும் பகுதியில் அந்த உஷ்ணத்தை தாங்கிக் கொள்ளும்படியான சரீரம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர்களுடைய சரீரம் கறுப்பாக இருக்கிறது. மிதமான சீதோஷ்ண நிலையில் உள்ளவர்கள் அதற்கேற்ற நிறத்தைக் கொண்டிருக்கிறார்கள். அதிக குளிர் பிரதேசப் பகுதியில் இருப்பவர்கள் வெள்ளையாக அவர்களுடைய சரீரம் காணப்படலாம். காலநிலை மாற்றத்தைப் பொருத்து அவர்களுடைய நிறங்கள் காணப்படுகிறன்றன. எல்லா நிறங்களும் ஒன்று சேரும்போது தேவனுடைய படைப்பை எண்ணி வியப்படைய வேண்டும்.

எந்த நிறத்தையுடையவர்களாக இருந்தாலும் அவர்களுக்குள் இருக்கும் ஆத்துமா பல நிறத்தையுடையதாக இருப்பதில்லை. எல்லாருக்கும் ஒரே விதமான ஆத்துமாதான் உள்ளது (எசே 18:4) அந்த ஆத்துமாவை இரட்சிக்கும்படிக்கே இயேசு கிறிஸ்து வந்தார். (மத். 16:26) மனுஷனுக்குத்தான் ஆத்துமா இருக்கிறது மிருகங்களுக்கு ஆத்துமா இல்லை. மிருகங்கள் தேவனுடைய வார்த்தையினாலே உண்டாயின. மனுஷனுக்குத்தான் அவன் நாசியிலே ஜீவ சுவாசத்தை ஊதினார் மனுஷன் ஜீவாத்துமாவானர்ன் (ஆதி. 2:7) நமக்கு ஆத்துமா இருப்பதனால் தான் நாம் பகுத்து அறிந்து கொள்ள முடிகிறது. நமக்கு ஆத்துமா இல்லை என்றால் நாமும் மிருகங்களை போலத்தான் இருப்போம். இந்த ஆத்துமா பாவம் செய்யும் போது மரணமடைகிறது. இது ஆவிக்குரிய மரணம். தேவனை விட்டு பிரித்து விடுகிறது. இப்படி எல்லாரும் பாவம் செய்து தேவனை விட்டு தூரமாய் பிரிந்து விட்டோம் .தேவனை இழந்து விட்டோம் (ரோம 3:23). தேவன் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பி, அவர் மூலமாக நம்மை தேவனோடு ஒப்புரவாக்கினார் (எபே. 2:16). இவைகளை நாம் விசுவாசித்து, மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெறும் பொழுது நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது (அப். 2:38) நம்முடைய ஆத்துமா விற்கு இரட்சிப்பு கிடைத்து தேவனோடு வாழும் பாக்கியம் கிடைக்கிறது. மரணபரியந்தம் தேவனோடு வாழ்ந்தால் தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் (வெளி. 2:10) இரட்சிப்பு நிறத்திற்கு இல்லை. ஆத்துமாவிற்கு. எனவே, கிறிஸ்துவுக்குள் நிற வேற்றுமை இல்லை. ☆

**(தொடரும்)**

# BIBLE MEDITATION

## TV PROGRAM




**கிருபையுள்ள வார்த்தை** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : **சகோ. பிலேமோன் ராஜா,** மதுரை.

| | | | |
|---|---|---|---|
| இமயம் | TV | சனி | காலை 7:45 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | காலை 7:45 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு 10:00 மணி |

**கிறிஸ்துவின் வசனம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : **சகோ. அர்ச்சுனன்,** வத்தலக்குண்டு.

| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| இமயம் | TV | புதன் | காலை 6:30 மணி |




**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**


| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815 New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday to Friday | 5.30 - 5.45 | Box. 80 Kakinada - 533 001 | Joshua Gootam |
| TAMIL | Sunday Thursday Friday | 6.45 - 7.00 p.m. 5.45 - 6.00 p.m. 5.30 - 5.45 p.m. | Box. 8405 Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane. Behind Sanskrit College. Trivandrum-695 034 | P.K. Varghee |


Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.

Licensed to Post without pre payment No: TN / WR / ERD / 03 / WPP / 2009-20111




( தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம் )

# திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | ஞாயிறு | காலை | 6:45 | மணி |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட

**சத்தியத்தின் குரல்**

என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

- ஆசிரியர்

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.